ஸ்ரீ:

ஸ்ரீமதே நாராயணாய நம: ॥

ஸ்ரீவிகநஸ மஹாகுரவே நம: ॥

ஸ்ரீ வைகானஸம்

மாத பத்திரிகை

ஸ்ரீ விகனே முனீந்த்ரः

மாலை:2 ஸ்ரீ ப்ரமாதி வருஷம் பங்குனி மாதம் மலர்: 2

Vol.2 No.2 March 2000

வருட சந்தா ரூ.60.00 தனி இதழ் விலை ரூ. 5.00

ஸ்ரீ:



திருமண அழைப்பிதழ்

நமது AKS டிரஸ்டின் நிர்வாஹ அறங்காவலர் மற்றும் ஸ்ரீவைகானஸம் பத்ரிகையின் இணையாசிரியருமான **ஸ்ரீ.உ.வே. D. மோஹன் பட்டாச்சாரியாருக்கும்** ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ உ.வே.L. ஸ்ரீநிவாஸ பட்டாச்சாரியாரின் குமாரத்தி **ஸௌ. S. ஜானகிக்கும்**, நிகழும் ஸ்ரீப்ரமாதி வருஷம் பங்குனிமாதம் 27ஆம் தேதி (9-4-2000) ஞாயிறன்று காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை வ்ருஷப லக்னத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் ஸன்னிதி தெரு, எண்.25 ல் உள்ள செருக்கூர் கல்யாண மண்டபத்தில் ஸ்ரீமந்நாராயணன் க்ருபாகடாக்ஷத்தாலும் ஆசாரியன், மற்றும் பெரியோர்களின் அனுக்ரஹத்தாலும் விவாஹம் நடைபெற வுள்ளது. **திருமண வரவேற்பு** சென்னை, தி.நகரில் **14.4.2000** வெள்ளி அன்று மாலை 6.30 மணிக்கு நெ.55, தெற்கு போக் சாலை ஸ்ரீமீனாக்ஷி கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நம் பத்திரிகையைத் தோற்றுவித்தவரில் முதன்மையாக விளங்கும் **ஸ்ரீ.உ.வே. D. மோஹன் பட்டாச்சார் ஸௌ. S. ஜானகி** கல்யாண வைபவத்திற்கு குலஸ்வாமிகள் அனைவரும் ஸஹகுடும்ப ஸமேதராய் எழுந்தருளியிருந்து தம்பதிகளை ஆஸீர்வதித்து அனுக்ரஹிக்கவேணுமாய் பரார்த்திக்கிறோம்.

வேணும் விஜ்ஞாபனம்
SRYAS **D. முரளிபட்டாச்சார்,**
அறங்காவலர், A.K.S. TRUST
N.S. பார்த்தசாரதி பட்டாச்சார்
(ஆசிரியர், ''ஸ்ரீவைகானஸம்'')
Dr.S. முத்து பட்டர், சங்கேந்தி.

ஸ்ரீஃ ॥

ஸ்ரீவிகநஸ மஹா குரவே நமஃ ॥



ஸ்ரீ வைகானஸம்

மங்களாஶாஸநம்

ஸ்ரீவைகாநஸ பத்ரிகா விகநா கருணோத்திதா ।
ஸ்ரீநிவாஸ கடாக்ஷேண ஜீயாதாசந்த்ர தாரகம் ।
ஸ்ரீவைகாநஸ பத்ரிகா ஸ்ரீஶஸ்ய ப்ரியயா ஸஹ ।
வைகாநஸாநாம் ஸர்வேஷாம் கேஹே கேஹே
ஸதா வஸேத் ॥

ஸ்ரீமத் விகநஸாசார்யருடைய கருணையினால் உண்டாகியிருக்கும் இந்த ஸ்ரீவைகாநஸ பத்திரிகை ஸ்ரீநிவாஸனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தினாலும் சந்திரன் நக்ஷத்திரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது. ஸ்ரீவைகாநஸர்கள் அனைவருடைய க்ருஹங்கள்தோறும் இந்த ''ஸ்ரீவைகாநஸம்'' பத்திரிகை ஸ்ரீமந் நாராயணனுடைய ப்ரியையான ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக் கடவது.

ஆசிரியர்

N.S. பார்த்தஸாரதி பட்டாச்சாரியார் D.E.E.,

இணை ஆசிரியர்

D. மோகன் பட்டாச்சாரியார், M.A.,

வெளியிடுவோர்:

AKS டிரஸ்ட்

24, எல்லையம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
Ph: 044-4710036 Email : MOHAND@eth.net

மாலை: 2 ஸ்ரீ ப்ரமாதி வருஷம் பங்குனி மாதம் மலர்: 2

ஸ்ரீஃ

விஷய ஸூசிகை

ஆசிரியர் உரை 5

பஞ்சாங்க ஸங்க்ரஹம், தர்ப்பண ஸங்கல்பம் 6

ஸ்ரீவைகானஸ கல்பஸூத்ரம் 7

திவ்ய தேசங்கள் 9

உத்ஸவாதி விவரங்கள் 10

ஸ்ரீ புருஷஸூக்த வ்யாக்யானம் 11

மருத்துவக்கட்டுரை 14

மணமாலை 16

மணிஓசை 20

ததீயாராதனம் பரம் 21

வடமொழி அகராதி 23

இந்த மாத ப்ரபலம் 25

வாசகர் கடிதங்கள் 26

தையற்கலை 27

சிறுவர் பகுதி 28

கேள்வி பதில் 30

குறுக்கெழுத்துப்போட்டி 33

இப்பத்திரிகைக்கு வரும் வாசகர் கடிதங்கள், கட்டுரைகள், கருத்துக்களை தொகுக்கவோ, சுருக்கவோ, ஒதுக்கவோ ஆசிரியர் குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு.

இப்பத்திரிகையில் வெளியாகும் கட்டுரைகள், மற்றும் வாசகர் கேள்விக்கான பதில்கள் வித்வான்கள் மற்றும் எழுத்தாளர்களின் சொந்தக்கருத்தாகும். இவற்றால் உண்டாகும் விளைவுகளுக்கு AKS டிரஸ்ட் மற்றும் ஆசிரியர் குழு பொறுப்பேற்காது.

மணமாலை பகுதியில் வெளியாகும் வதூ/வரன் குறித்த செய்திகள் பத்திரிகைக்கு கடிதம் மூலம் பெற்றவையே- வதூ/வரன்களைப் பற்றி தீர விசாரித்துச் செயல்படவும். இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு AKS டிரஸ்ட் மற்றும் ''ஸ்ரீவைகானஸம்'' பத்திரிகை பொறுப்பேற்காது.

உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?
உடனே புதுப்பிக்கவும்.

ஆசிரியர் உரை

ஸ்வாமிகள் ஸன்னிதியில் விஜ்ஞாபனம்.

சென்ற 13-2-2000 தேதியன்று திருவல்லிக்கேணியில் ஸ்ரீபார்த்த சாரதி ஸ்வாமி திருவடிவாரத்தில் நமது ஸ்ரீவைகானஸம் பத்திரிகையின் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்ட அனைத்து குலஸ்வாமிகளுக்கும் அடியோங்கள் தன்யவாதங்களையும் ப்ரணாமங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தொடர்ந்து பலகுலஸ்வாமிகள் சந்தாவை புதுப்பித்துக் கொண்டிருப்பது அடியோங்களுக்கு மிகுந்த உத்ஸாஹத்தை தருகிறது. குலஸ்வாமிகள் அனைவரும் தொடர்ந்து ஆதரவளித்து பத்ரிகையை உத்தரிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம். பத்ரிகை பற்றி அறியாத குலஸ்வாமிகளுக்குத் தெரியப்படுத்தி அவர்களை வாங்கச் செய்ய வேணுமாய் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். சந்தாவைப் புதுப்பிக்கும்போது சந்தா எண் கண்டிப்பாக மாறும். மாறிய புதிய எண்ணைக் கொண்டு தபால் மூலம் அடியோங்களை தொடர்பு கொள்ளவும். அனைத்து வாசகர் (சந்தாதாரர்)களுக்கும் அனுப்பப்படும் (புத்தக) தபால் உறை மேலேயே உங்கள் முகவரி மேல் AKS என்று தொடங்கும் நான்கு இலக்க சந்தா நம்பரும் சந்தா முடிவடையும் தமிழ் மாதம், வருஷம் குறிப்பிடப்பட்டுள்ளதை கவனித்துக் கொள்ளவும். சந்தா எப்பொழுது முடிவடைகிறது என்பதை தபால் உறை மேலேயே ஒவ்வொருவருக்கும் கணிப்பொறி உதவியுடன் அச்சிட்டுள்ளோம். அதன்படி, விவரமெழுதி அடியோங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இப்படிக்கு
ஆசிரியர் குழு

செய்தி

ஸ்ரீவைகாநஸ ஞானவேள்வி ஆஹுதி - 12 மதுராந்தகம் 130, தேரடி தெருவில் 27.2.2000 அன்று நடை பெற்றது. விழா, நாமரத்னாவளி, வேதாரம்பத்துடன் தொடங்கியது. செல்வன் ஸ்ரீ. K. கஸ்தூரி ரங்கபட்டாச்சார் (புலவனூர்) நேரடியாக புண்யாஹவாசனம் செயல் முறை விளக்கத்துடன் செய்து காட்டினார். பின்பு கவியரங்கம் நடைபெற்றது, தலைமை ஸ்ரீ உ.வே. S. ரகுவீர பட்டாச்சார், மதுராந்தகம் கலந்து கொண்டோர்: ஸ்ரீ உ.வே. S. ராஜகோபால பட்டாச்சார், காட்டாங்குளத்தூர், ஸ்ரீ உ.வே. நா. வேங்கட வரதபட்டாச்சார், மருதாடு, செல்வன் ஸ்ரீ. கஸ்தூரி ரங்க பட்டாச்சார் புலவனூர், பின்பு Dr. S. முத்துபட்டர் சங்கேந்தி அவர்கள் தலைமையில், சிறுவர்கள் பங்கு கொண்டு பேசினாகள் செல்வன் ஸ்ரீ B. கோவிந்தராஜ பட்டாசசார், செல்வன் ஸ்ரீ S.D. லக்ஷ்மிநாராயணபட்டாச்சார், செல்வன் ஸ்ரீ S. கோதண்டராமபட்டாச்சார், செல்வன் ஸ்ரீ K. கஸ்தூரி ரங்கபட்டாச்சார் ஆகியோர் நமது ஸாஸ்த்ர விஷயங்களிலிருந்து சில தலைப்புகளில் அழகாக பேசினார்கள். போந்தூர் ஸ்ரீ K. தேஹளீச பட்டாச்சார் நன்றிகூற மங்கள ஸ்லோகத்துடன் விழா இனிதே நிறைவுற்றது. உபயம் ஸ்ரீ விகநஸப்ரியன்.

By **நமது நிருபர்**

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கலியுகாதி 5101 ப்ரமாதி வருஷம் உத்தராயணம், சிசிரருது, பங்குனி மாதம்

2000	பங்குனி	கிழமை	முக்கிய அம்சம்
மார்ச்			
14	1	செவ்	பங்குனிமாதப்பிறப்பு காலை 7.25 a.m. IST காரடையார் நோன்பு, காலை 6 மணிக்கு மேல் 7.15 க்குள் சரடு கட்டிக் கொள்ள வேண்டியது.
16	3	வியா	ஸர்வ ஏகாதசி
17	4	வெள்	திதித்வயம் (துவாதசி - திரயோதசி)
19	6	ஞாயி	பௌர்ணமி விரதம்
20	7	திங்	பங்குனி உத்திரம்
30	17	வியா	ஸ்ரவண விரதம்
31	18	வெள்	ஸர்வ ஏகாதசி
ஏப்ரல்			
4	22	செவ்	ஸர்வ அமாவாசை
5	23	புத	யுகாதி தெலுங்கு வருடப்பிறப்பு (5102)
9	27	ஞாயி	திதித்வயம் (பஞ்சமி-ஷஷ்டி)
12	30	புத	ஸ்ரீராமநவமி

தர்ப்பண ஸங்கல்பம்

கலியுகாதி 5101 பங்குனி மாதம் 1 ஆம் தேதி (14.3.2000) மாசப் பிறப்பு, ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே ஸ்ரீப்ரமாதிநாம ஸம்வத்ஸரே உத்தராயணே ஸிஸிரருதௌ மீனமாஸே ஸுக்லபக்ஷே நவம்யாம் ஸுபதிதௌ ஆர்த்ரா நக்ஷத்ர யுக்தாயாம் ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண ஏவங்குண விஸேஷண விஸிஷ்டாயாம் அஸ்யாம் நவம்யாம் புண்யதிதௌ மீனரவி ஸங்க்ரமணகாலே காவேரீ மத்யே மீனரவி ஸங்க்ரமண ஸ்ராத்தம் திலதர்ப்பண ரூபேண அத்யகரிஷ்யே.

பங்குனி மாதம் 22 ஆம் தேதி (4.4.2000) அமாவாஸ்யை

ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே ஸ்ரீ ப்ரமாதி நாம ஸம்வத்ஸரே உத்தராயணே ஸிஸிரருதௌ மீன மாஸே க்ருஷ்ண பக்ஷே அமாவாஸ்யாயாம் ஸுபதிதௌ ப்ருகுவாஸர யுக்தாயாம் உத்தர ப்ரோஷ்ட பதா நக்ஷத்ர யுக்தாயாம் ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண ஏவங்குண விஸேஷண விஸிஷ்டாயாம் அஸ்யாம் அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ தர்ஸ புண்யகாலே காவேரி மத்யே தர்ஸ ஸ்ராத்தம் திலதர்ப்பண ரூபேண அத்யகரிஷ்யே.

அடுத்த இதழ் முதல் பெண்களுக்கான புதிய தொடர் ஆரம்பமாகவுள்ளது. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீவைகாநஸகல்பசூத்ரம்

(சங்கேந்தி டாக்டர் S.முத்துபட்டர், விரிவுரையாளர்,
சம்ஸ்கருத பிரிவு, விவேகானந்தா கல்லூரி, சென்னை - 4)

விஷ்ணுஃ ப்ரியா விஷ்ணுபாதாஃ சாந்தா ச்ராமணகாஃ ப்ரியாஃ ।
பாரமாத்மிக மந்த்ரக்ஞாஃ சௌம்யாஃ சௌம்ய மதானுகாஃ ।

பதிமூன்றாவது ஸம்ஸ்காரம் -சௌளம்

ஸ்ரீமத் விகநஸ முனியால் அனுக்ரஹித்த ஸ்ரீவைகாநஸ கல்பசூத்ரம், க்ருஹ்யசூத்ர பிரிவில் மூன்றாவது ப்ரச்னம் இருபத்திமூன்றாவது கண்டத்தில் இச்சம்ஸ்காரம் எடுத்தியம்பப்படுகிறது. சௌளம் என்றால் குழந்தைக்கு சிகை அலங்காரம் செய்வது எனப் பொருள். (சௌளம் நாம சூடாகர்மக்ரியதே) இதற்கு நாந்தீமுக அப்யுதயம் உண்டு. இதை குழந்தை பிறந்து முதல் வருடம் அல்லது மூன்றாவது வருடம் செய்யவேண்டும் என்கிறார். (வர்ஷே ப்ரதமே த்ருதீயே வா சௌளகர்ம) உத்தராயணத்தில் சுக்லபக்ஷத்தில் சுபநக்ஷத்ர யோக கரணத்தில் நாளை தேர்ந்தெடுத்து, குழந்தையின் தகப்பனார், தாயார் காலையில் நித்யகர்மாக்களை முடித்து சுத்தமான இடத்தில் புண்யாஹம் செய்து அக்னிப்ரணயனம் செய்துகொள்ள வேண்டும். பின்பு ஸங்கல்பத்தின் முடிவில் ''ஏனம் குமாரம் சௌள கர்மணா ஸம்ஸ்கரிஷ்யே'' என சொல்லிக்கொள்ள வேண்டும். இந்த சௌள கர்மாவை குறித்து தாதாதி, பஞ்சவாருணம், ராஷ்ட்ரப்ருத் போன்ற ஹோமங்களைச் செய்து மூலஹோமம் முடிந்தவுடன் குழந்தையை தந்தை தனதருகில் உட்காரும்படி வைத்துக்கொள்ளவேண்டும். குழந்தையின் முன்புறம் குழந்தையின் அம்மா அல்லது ப்ரஹ்மசாரி யாரேனும் ஒருவர் தாம்பாளத்தில் பசுமாட்டின் விரட்டியை வைத்துக்கொண்டு நின்று கொள்ளவேண்டும். தகப்பனார் சிவோ நாமாஸி என்ற மந்திரத்தை உச்சரித்து கத்தியை எடுத்துக்கொள்ளவேண்டும். சிவானோ பவத என்ற மந்திரத்தைச்சொல்லி கத்தியை (தீக்ஷணம்) கூர்மை படுத்திக் கொள்ளவேண்டும். கோதானமுனக்து என்ற மந்திரத்தைச் சொல்லி ஆசார்யன் அல்லது நன்கு வேதாத்யயனம் செய்தவர்களுக்கு கோ/பசு தானம் அல்லது அதன் அங்கமாக(ப்ரதிநிதியாக) தானம் கொடுக்க வேண்டும். ஆப உந்தந்து என்ற மந்திரத்தால் குழந்தையின் தலையை ஜலத்தால் துடைக்க வேண்டும். ஓஷதே த்ராயஸ்வைனம் என ப்ராரம்பிக்கும் மந்திரத்தை அனுசந்தித்து நுனியுடன் கூடிய இரண்டிரண்டு தர்பங்களை அக்ஷதையுடன் குழந்தையின் சிரஸில் கிழக்கு, வடக்கு நுனியாக/அக்ரமாக வைக்கவேண்டும்.

ஸ்வதிதே மைனகும் ஹிகும் ஸீஃ என்ற மந்திரத்தால் கத்தியை வைத்துக்கொண்டு, ஊர்த்வாக்ரா ஓஷதீஃ என்ற மந்திரத்தால் கிழக்கிலும் யேனாவபத் என்ற மந்திரத்தால் வடக்கிலும், யேனபூஷா என்ற மந்திரத்தால் மேற்கிலும், அஸாவாயுஷா என்ற மந்திரத்தால் தெற்கிலும் உள்ள தர்பை மற்றும் ஒரே ஒரு கேசத்தையும் (ஸரோமாணம் சித்வா) பின்னம்/வெட்டி எடுத்து கோ சராவத்தில் (விரட்டியில்) போடவேண்டும். இதன் பிறகு 'ஜ்யோக்ச ஸூர்யம் த்ருசே'' என்ற மந்த்ரத்தைகூறி குடுமி வைக்கவேண்டும். (நாபிதனிடம் சென்று) இங்கு நம்விகநஸர் அவரவர்களின் ரிஷியினுடைய தர்மத்தை அனுஷ்டிக்கலாம் என குறிப்பிடுகிறார். அதாவது கோத்ரத்தின்படி ஒரு ரிஷி, இரண்டு,

மூன்று ஐந்து ரிஷிகளிருப்பதால் அவரவர்களின் அனுஷ்டானப்படி வலதுபுறம் சிகைவைத்துக்கொள்வது அல்லது மத்தியில் இரண்டு சிகை, மூன்று சிகைபோன்று வைத்துக்கொள்ள ஆசைப்பட்டால் வைத்துக் கொள்ளலாம் என்கிறார். (ரிஷி க்ரமேண ஸ்வஸ்ய ஏகார்ஷ த்வ்யார்ஷ, த்ரயார்ஷ, பஞ்சார்ஷ, ஸப்தார்ஷ சூளாம் விபஜேத்) ஆனால் நம்முடைய தேசாசாரப்படி ஒரு குடுமி மட்டும் அனுஷ்டானத்தில் உள்ளது. சிகை வைத்துக்கொண்டவுடன் குழந்தை தலையிலிருந்து எடுத்த கேசத்தை (முடியை) குழந்தையின் பெயரைச் சொல்லி... சர்மணஃ பாப்மானமப க்ருண்ணாமி (குழந்தையிடமுள்ள பாபத்தை எடுத்துக்கொள்கிறேன்) எனக் கூறி அம்மா அம்முடியை கோஷ்டத்திலாவது, ஔதும்பரம், தர்பை போன்றவைகளிருக்கும் இடத்தில் பூமியை பறித்து அதில் சேர்த்து மண்ணை மூடிவிடவேண்டும். இதனால் அக்குழந்தை யிடமிருக்கும் அனைத்துபாபங்களும் அழிந்துவிடுகிறது. ஸ்னானம் செய்த குமாரனை தகப்பனார் தனது வலதுபுறம் உட்காரச் செய்து பஞ்சப்ராயச் சித்தங்களைச் செய்து, புண்யாஹவாசனம் செய்து சுத்திசெய்துகொள்ள வேண்டும். அந்தஹோமம் செய்து நாபிதனுக்கு நிறைய அன்னம் கொடுத்து த்ருப்திபண்ணவேண்டும். குருவிற்கு/ஆசார்யனுக்கு கோதானம், தக்ஷிணாதானம் செய்யவேண்டும். தேவர்களை அர்ச்சித்து ப்ராஹ்மணர்களுக்கு ததீயாராதனம் செய்து த்ருப்தி படுத்தவேண்டும்.

இந்த சம்ஸ்காரம் உபனயனத்திற்கு முன்பே பண்ணப்படவேண்டுமா? என்றால் இதுவும் ஒரு ஸம்ஸ்காரமாக நமது ரிஷி விதித்து இருப்பதால் கண்டிப்பாக ஒன்று அல்லது மூன்று வயதில் இச் சம்ஸ்காரத்தை அனுஷ்டிக்கவேண்டும் என்கிறார் மகி -

கர்மண்யதிக்ருதே யே ச வைதிகே ப்ராஹ்மணா தயஃ।
தைச்ச தார்யமிதம் சூத்ரம் க்ரியாங்கம் தத்திவை ஸ்ம்ருதம்॥

இங்கு கூறியுள்ள மந்த்ரங்கள் குழந்தைக்கு மங்களத்தின் பொருட்டும், பாபத்தை போக்கடிப்பதன் பொருட்டும் கூறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தற்சமயம் விஞ்ஞானிகள் கண்டுபிடித் துள்ளனர் - ஒவ்வொரு மனிதனுடைய தலையில் முன்பகுதிக்கு உஷ்ணமும், சூரிய ஒளியால் கிடைக்கும் சக்தியும் தேவை என்று, ஆதலால் தான் தொன்றுதொட்டு வரும் ப்ராஹ்மணர்கள் சிரஸின் முன்புறமுள்ள முடியை எடுக்கிறார்கள் என்றும் கண்டுபிடித்துள்ளனர். இதையும் தவிர மூளையின் பின்பகுதிக்கு பாதுகாப்பு தேவை என்பதால் முடியை வளர்த்து சிகையாக கட்டும்போது கீழே விழுந்து அடிபடுமாயின் மூளையின் பின்பகுதி பாதிக்காது அவ்விடம் இறுகி இருக்கும் என்பதையும் கண்டுபிடித்துள்ளனர். ஆதலால் சாஸ்த்ரத்தை நாம் கடைபிடித்தால் நன்மையையே அடைவோம் என்பதில் ஐயமில்லை.
சாஸ்த்ராய ச ஸுகாய ச. மங்களானி பவந்து. **(தொடரும்)**

அறிவிப்பு

நமது குல ஸ்வாமிகள் பங்கு கொள்ளும் பேட்மிண்டன் போட்டி வருகிற ஏப்ரல் 30 மற்றும் மே 1ந் தேதி சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற உள்ளது. இரட்டையர் போட்டி மட்டுமே நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் ஏப்ரல் 25ந் தேதிக்குள் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ஸ்ரீ G. பார்த்தசாரதி பட்டாச்சார், 7, மேற்கு குளக்கரை தெரு, நந்தம்பாக்கம், சென்னை - 600 089. Ph.(R) 2329176, (O) 4825719

திவ்ய தேசங்கள் - 3

D. மோகன் பட்டாச்சார், M.A., இணை ஆசிரியர் ஸ்ரீ வைகானஸம்

உறையூர்

இந்த ஸ்தலம் திருச்சி ஜங்க்ஷனிலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஸ்டேஷன் ஜங்க்ஷன் - மெயின் கார்டு கேட் பஸ் மார்க்கத்தில் உறையூர் அல்லது நாச்சியார் கோயில் என்று கேட்டு இறங்கவும். திருச்சியின் மத்தியிலேயே உள்ளது. இது சோழநாட்டுத் திருப்பதியைச் சேர்ந்த ஸ்தலம்.

ஸ்தல புராணம்

சோழ வம்சத்தை சேர்ந்த நந்தசோழன் பிள்ளைபேறு இல்லாமல் அவதியுற்று ஸ்ரீரங்கநாதனின் அருளால் குளத்தங் கரையில் மஹாலக்ஷ்மியே கமல மலரில் அவதரித்தார் அந்த வழியாகவந்த நந்தசோழன் குழந்தையை கண்டெடுத்து, வளர்த்து வந்தான். கமலவல்லி என்று பெயரிட்டான். கமலவல்லி வளர்ந்து பருவமடைந்தபின்னர் குதிரை மீது சென்ற ஸ்ரீரங்கநாதனிடம் மனதை பறிகொடுத்து அவரையே மணப்பேன் என்றுகூறி நந்தசோழனும் அதற்கு சம்மதித்தான். பின்பு ஸ்ரீரங்க கருவறையில் ரங்கநாதனிடத்தில் ஜோதிரூபமாக ஐக்கியமாகிவிட்டார். இந்த ஸ்தலத்தில் பெருமாளுக்கு உற்சவர் கிடையாது. ஸ்ரீரங்கத்தில் உள்ள உற்சவரே இங்கு பங்குனி உத்திரத்தன்று எழுந்தருளி கமலவல்லி தாயாரை விவாஹம் செய்து கொள்கிறார்.

மூலவர் :	அழகிய மணவாளப் பெருமாள், நின்ற திருக்கோலம் ப்ரயோக சக்ரம், வடக்கே திருமுகமண்டலம்
தாயார் மூலவர்:	வாஸ லக்ஷ்மி
தாயார் உத்ஸவர்:	உறையூர் வல்லி - கமலவல்லி
விமானம்:	கல்யாணவிமானம்
தீர்த்தம்:	கல்யாணதீர்த்தம் (கமல புஷ்கரிணி) சூரிய புஷ்கரிணி, குடமுருட்டி நதி.
ப்ரத்யக்ஷம்:	ரவிதர்மா, 33 கோடி தேவர்கள்
ஆராதனம்:	பாஞ்ச ராத்ரம்
மங்களாஸாஸனம்:	திருமங்கையாழ்வார் மற்றும் குலசேகராழ்வார். மொத்தம் 2 பாசுரங்கள் திருப்பாணாழ்வாரின் அவதார ஸ்தலம் இது.

சுபம் **தொடரும்**

உத்ஸவாதி விவரங்கள்

கலியுகாதி 5101 ஸ்ரீப்ரமாதி வருஷம் ஸிஸிரருது மீனமாஸம்

பங்குனி	மார்ச்	கிழமை	உத்ஸவம்
2	15	புத	திருமலை திருப்பதி தெப்போத்ஸவம் (5 நாள்) நாச்சியார் கோயில் கல்கருட சேவை
3	16	வியா	திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி தவன உத்ஸவ நிறைவு திருவல்லிக்கேணி ஸ்ரீரங்கநாதர் பல்லவோத்ஸவாரம்பம் (5 நாள்) மேலக்கோட்டை திருநாராயணபுரம் வைரமுடி ஸேவை
6	19	ஞா	திருவாலி திருநகரி வேடுபறி, வான்மாமலை ஸ்வர்ணகோரதம்
7	20	திங்	ஸர்வ தேசங்களிலும் பங்குனி உத்தரம் திருக்கல்யாணம், நாச்சியார் கோயில், கண்டியூர் திருத்தேர்
8	21	செவ்	நாமக்கல் திருத்தேர்
10	23	வியா	திருவல்லிக்கேணி ஸ்ரீநரஸிம்ஹர் தவனோத்ஸவம் (3 நாள்) சென்னை மயிலை ஸ்ரீஆதிகேஸவர், சிந்தாத்ரிபேட்டை ஸ்ரீ ஆதிகேஸவர் ப்ரஹ்மோத்ஸவாரம்பம்
14	27	திங்	திருவல்லிக்கேணி ஸ்ரீரங்கநாதர் வேதவல்லித்தாயார் தவனோத்ஸவம் திருவல்லிக்கேணியில் சிங்கராச்சாரி தெருவில் தேராபந்தி பவனில் ஸ்ரீஸுதர்ஸன குபேர தனலக்ஷ்மி தன்வந்த்ரி மஹாயக்ஞம்
ஏப்ரல்			
19	1	சனி	திருப்பதி ஸ்ரீகோதண்டராமர் ப்ரஹ்மோத்ஸவாரம்பம்
23	5	புத	கலியுகாதி 5102 வருஷப்பிறப்பு யுகாதி பஞ்சாங்கஸ்ரவணம் ஸ்ரீராமநவமி உத்ஸவாரம்பம்
28	10	திங்	திருச்சி கரம்பனூர் உத்தமர்கோயில் உத்ஸவாரம்பம்
30	12	புத	ஸ்ரீபெரும்பூதூர் யதிராஜ ஸம்பத்குமார வைபவம் வைரமுடி

சென்னை அண்ணாநகர் நடுவாங்கரை ஸங்கடமோசன ஹநுமான் ஸன்னிதியில் 11-2-2000 அன்று ஸ்ரீகோதண்டராமர் ப்ரதிஷ்டாவைபவம் சிறப்பாக நடைபெற்றது.

மரபை வளர்க்க வைத்தவரே 'மா' பெரும் சாதனை செய்தவரே.
இக்குலம் நான் என்று சொல்வதிலே, இருக்கும் பெருமை எதிலுண்டு
இன்பம் இதுவே அல்லாமல், இல்லை வேறெதும் எங்களுக்கு
யாருக்கும் கிடைக்காத பெரும் பேறு, எவரும் அறிந்திலா சிறப்பிதுவே
எளிதாய் அவன் சேவடியை என்றும் வணங்கிடும் பாக்கியமே.
வைகானஸன் என்று சொல்வதிலே, வைராக்யம் கொண்டு உரைத்திடுவீர்
வையத்தில் இதுவல்லால் ஏதுவழி வைகுந்தம் நாம் அடைய யோசிப்பீர்.
வாழ்க ஸ்ரீவைகானஸம்! வளர்க உங்கள் பணி

ஸ்ரீமதி. S. ஸ்ரீவித்யா ஸ்ரீதரன், உ. கோயில்

ஸ்ரீ புருஷ ஸூக்த வ்யாக்யானம்

N.S.பார்த்தஸாரதி பட்டாச்சாரியார், ஆசிரியர் ''ஸ்ரீவைகானஸம்''.

மந்த்ரம்-17

1. தா[1]தா புரஸ்தாத் யம் உதா[3]ஜஹார। 2. ஶக்ரஃ ப்ரவித்வாந் ப்ரதி[3]ஶ:சதஸ்ர:
3. தம் ஏவம் வித்வாந் அம்ருத இஹ பவதி। 4. நஅந்ய:பந்தா[2] அயநாய வித்[3]யதே॥

அர்த்தம்: ப்ரஹ்மா முன்பு எவரை உபாஸித்தாரோ, பரப்ரஹ்ம ஜ்ஞானி (ப்ரவித்வான்) யான இந்த்ரன் (ஶக்ரன்) எவரை உபாஸித்தனனோ, அஷ்டதிக்பாலகர்களும் (எட்டுத்திக்கிலுமுள்ள ரிஷிகளும்) எவரை தியானித்துக் கொண்டிருந்தனரோ, அந்த பரமபுருஷனை இவ்வாறாக அறிபவன் இந்த ஜன்மத்திலேயே முக்தியடைகிறான் மோக்ஷத்திற்கு வேறு வழியில்லை.

வ்யாக்யா: வேதபுருஷன் தன்னைத் தவிர இன்னும் சிலரும் பரமாத்மஜ்ஞானம் பெற்றுள்ளார்கள் என்று கூறி இந்த ஜ்ஞானம் பெறுவதே மோக்ஷத்திற்கான உபாயம் எனவும் நிர்ணயிக்கின்றான்.

முதலில் பெருமாளால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ரஹ்மா; பெருமாளை தியானித்து ஸாக்ஷத்காரமாக சேவித்தே ஸ்ருஷ்டி செய்யும் ஶக்தியை அடைந்தார் என்பது உலகப்ரஸித்தம்.

''ஶதக்ரது'' என்று 100 அஶ்வமேதயாகம் செய்து பகவானை ஆராதித்தே இந்த்ரபதவியை அடைந்தான். இந்த்ரன்.

அடுத்த ப்ரஹ்ம பதவியை பெறவுள்ள ஸ்ரீஹனுமானும் அடுத்த மன்வந்தரத்தில் இந்த்ர பதவியை அடைகின்ற மஹாபலி சக்ரவர்த்தியும் பெருமாளை பக்திஶ்ரத்தையுடன் சோளிங்கர், திருப்பதி முதலான இடங்களில் பெருமாளை அர்ச்சாரூபியாக உபாஸித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ப்ரதிஶ: எட்டு திசைகளுக்கும் அதிபதியாக உள்ள இந்த்ரன், அக்னி, யமதர்மன், நிருருதி, வருணன், வாயுதேவன், குபேரன், பரமசிவன் ஆகியோர் புருஷோத்தமனான ஸ்ரீமந்நாராயணனை உபாஸித்தவர்கள். திருவாய்மொழியில் (2-2-10) நம்மாழ்வாரும்,

''கள்வா! என்மையும் எம்மையும் ஏழுலகும் நின்
உள்ளே தோற்றிய இறைவ!' என்று
வெள்ளேறன் நான்முகன் இந்திரன் - வானவர்
புள்ளூர்தி கழல் பணிந்து ஏத்துவரே''

என்று வெள்ளேறன் - ரிஷபவாஹனனான பரமசிவன், ப்ரஹ்மா, இந்த்ரன் மற்றும் வானவரெல்லாம் புள்ளூர்தி-கருட வாஹனனான பெருமாளை உபாஸிக்கின்றனர், என்கிறார்.

ஸ்ரீவைகானஸர், வாலகில்யர்கள் அத்ரி, ப்ருகு, மரீசி, காஶ்யபர், கர்தமர், தக்ஷர், வஸிஷ்டர், நாரதர், பராஶரர், வால்மீகி, வேதவ்யாஸர், ஶுகர், ஶௌனகர் முதலான மஹரிஷிகளும் இந்த ஹ்ருஷீகேஶனையே உபாஸிக்கின்றனர். ப்ரதிஶ்சதஸ்ர:- நான்கு திக்கிலும், விதிக்குகளிலும் வசிக்கின்ற மஹர்ஷிகள் என்று பொருள் கொள்ளலாம்.)

தம் ஏவம் - இப்பேற்பட்ட ப்ரஸித்தமான பரமாத்மா ஸ்ரீமந்நாராயணனை ''இவ்வாறாக'' அறிபவன், அம்ருத இஹ - என்று இந்த ஜன்மத்திலேயே பிறப்பிறப்பு என்று பந்தத்திலிருந்து விடுபட்டு முக்தனாகிறான். ''ஏவம்'' என்றால் ஸர்வருக்கும் காரணபூதராகவும், ஸர்வரக்ஷகராகவும், அனந்த கல்யாண குணங்களை உடையவராகவும், அத்யாஸ்சர்யமான (இயற்கைக்கு அப்பாற்பட்ட) திவ்யமங்கள விக்ரஹத்தை உடையவராகவும் உள்ள இவ்வாறான பெருமாளை என்று பொருளாகும்.

பகவத் பக்திஸமுத்ரத்தில் ஆழங்கால் பதித்து முத்து முத்தான பாசுரங்களை நமக்குஉவந்தளித்த ஆழ்வார்களும் ''படியாவேனே'' என்றும் ''அசுவைபெறினும் வேண்டேன்'', என்றும் அர்ச்சா ரூபியான பெருமாளை பக்தியுடன் ஸேவித்து இவ்வுலகிலேயே முக்தர்களானார்கள்.

ந அந்ய: பன்தா² - வீட்டுப்பேற்றை - மோக்ஷத்தை அடைவதற்கு (பெருமாள் திருவடி பற்றுவதைத் தவிர) வேறு வழியே இல்லை என்கிறார் வேதபுருஷன் (வேதம் அறுதியிட்டுக் கூறுகின்றது).

''ந கர்மணா ந ப்ரஜயா தநேந த்யாகேந ஏகே அம்ருதத்வம் ஆநஶு:॥ (கர்மாவினாலும், ப்ரஜைகளாலும், தனத்தினாலும் மோக்ஷமடைய முடியாது. ஶரணாகதி செய்துதான் பலரும் மோக்ஷமடைந்தனர்.)

''நாயமாத்மா ப்ரவசநேந லப்ய: ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந।

யமே வைஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்॥

(இந்த பரமாத்மா பக்தியில்லாது செய்யப்படுகின்ற ஸ்தோத்ரம், தியானம், ப்ரவசனம், முதலியவற்றால் அடையத்தக்கவன் அல்லன்; இப்பரமாத்மா எந்த ஜீவனை வரிக்கிறானோ (இஷ்டப்படுகிறானோ) அவனுக்கே தன்ஸ்வரூபத்தை காட்டுகிறான் என்று வேதங்கள் கூறுகின்றன.

ஸ்ரீபகவத் கீதையிலும், பெருமாள்,

''பக்த்யா த்வதந்யயா ஶக்ய: அஹமேவம் விதோர்ஜுந॥

அர்ஜுந। என்னிடத்தில் பக்தியில்லாது செய்யப்படுகின்ற வேதாத்யயனத்தினாலும், தபஸ்ஸினாலும், தானத்தினாலும், யாகத்தாலும், எவராலும் என்னைக் காணமுடியாது. அந்நய பக்தி (அத்யந்த பக்தி) யால் மட்டுமே நான் காணத்தக்கவன்!'' என்கிறார்.

ஸ்ரீமத்விகநஸாசார்யரும் ''பக்த்யா பகவந்தம் நாராயணமார்ச்சயேத்'' என்று பக்தியுடன் பெருமாளை அர்ச்சிக்க வேண்டும் என்றார். ஸ்ரீவிகனஸமஹர்ஷியின் ப்ரதம ஶிஷ்யர்களான நம் அத்ரி, ப்ருகு, மரீசி, காஶ்யபர் ஆகிய மஹர்ஷிகளும் பக்தியுடன் ஆராதிப்பதை முக்யமாக கூறுகின்றனர். உதாஹரணமாக, **ஸ்ரீகாஶ்யபமஹர்ஷி,** ஜ்ஞான காண்டத்தில் 51-வது அத்யாயத்தில், 'ப்ரஹ்மாதயோபி தத்ரூப லக்ஷண நிஶ்சயம் ஜ்ஞாதுமஶக்தா: சித்தபித்தெள பக்தி தூளிகயா ஸங்கல்ப்ய வர்ணைராவேஷ்ட்ய ஆலோகயந்தி। தஸ்மாத் பக்திரேவ காரணம்। அபீக்ஷண தர்ஶனயோக்யம் தத்பகவத்ரூபம் கல்பயேத்''

-'ப்ரஹ்மா முதலான தேவர்களும் மஹர்ஷிகளும் பெருமாளுடைய ஸௌந்தர்ய ரூபலக்ஷணம் தெரிந்து கொள்ள இயலாதவர்களாய், இருந்தும், முயற்சி செய்து சித்தம் (மனம்) என்னும் சுவற்றில் பக்தி எனும்

தூரிகையால் வண்ணம் தீட்டி பெருமாளை வரைந்து ஸேவிக்கிறார்கள். பக்திதான் முக்ய காரணமாக உள்ளது. பெருமாளின் அர்ச்சாவிக்ரஹம் பயமுண்டு பண்ணாமலும் தரிசிக்க ஆனந்தகரமாகவும் செதுக்க வேண்டும்'' என்கிறார்.

இம்மந்த்ரத்திலே ப்ரஹ்மருத்ர இந்த்ராதி தேவர்களும் மஹர்ஷிகளும் பெருமாளை அர்ச்சாரூபியாக உபாஸித்ததைச் சொல்லி (ஏவம்) இவ்வாறு எவர் பக்தியுடன் த்யானம் செய்தாலும் அவரெல்லாம் மோக்ஷமடைவர் என்று வேதபுருஷன் வர்ணிக்கிறார் (வேதம் கூறுகிறது) நம் ஸ்ரீவைகாஸ ஸித்தாந்தமே சென்ற மந்த்ரத்திலும் இம்மந்த்ரத்திலும் விளங்குவதைக் காண்கிறோம்.

ஸர்வே ஜநாஸ்ஸுகிநோ பவந்து॥ **தொடரும்**

12 ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவ, மாணவியருக்கு

ஓர் முக்கிய செய்தி

நீங்கள் இந்த +2 தேர்வுக்குப்பிறகு பொறியியல் அல்லது மருத்துவ அல்லது கலை கல்லூரிகளில் சேர இருந்தால், நீங்கள் முன்கூட்டியே பல விஷயங்களை திட்ட மிடவேண்டும்

பொறியியல்/மருத்துவ/விவசாய பட்டங்கள் விழைவோர்: நீங்கள் பொதுத்தேர்வு முடிந்தவுடன் நுழைவுத்தேர்வுக்கு தயார்செய்து அதனை நல்ல முறையில் எழுத வேண்டும். போட்டி மிகவும் கடுமையாக இருப்பதால் 0.01 மதிப்பெண்கூட மிக அதிக வித்தியாசமாக உள்ளது. எனவே நீங்கள் நுழைவுத்தேர்வை எழுத, பாடங்களை படிப்பதில் அல்லது தேர்வு எழுதும் முறையில் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் உங்களுக்கு ஆலோசனைகள் வழங்கவும், உதவவும், தொடர்பு கொள்ளவும்.

கலைக்கல்லூரி பட்டங்கள் (B.A., B.SC., B.Com) விழைவோர். அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, நாம் எதிர்பார்க்கும் மதிப்பெண்களுக்கு எந்த கல்லூரியில் நாம் விழையும் படிப்பிற்கான இடம் கிடைக்கும் என்பதை திட்டமிட்டு விண்ணப்பங்களை போடவேண்டும். இல்லையேல் இடம் கிடைப்பது கடினமாகவும், பணவிரயத்திலும் முடியும், எனவே முன்கூட்டியே திட்ட மிடுதல் மிகவும் அவசியம். ஆலோசனைகள் பெறவும், உதவிபெற்றிடவும் தொடர்பு கொள்ளவும்.

பேராசிரியர்: R. ஜெகந்நாதன்
22, யு.ஆர். நகர், (வீல்ஸ் இந்தியா எதிரில்)
பாடி, சென்னை - 600 050.
தொலைபேசி: 044-6547303
Email : jaganr@kmronline.com

மருத்துவக் கட்டுரை-3

எஸ். ஸ்ரீதரன், பரம்பரை சித்த மருத்துவர், சதுரங்கப்பட்டினம்.

வில்வம்

வைணவ கோயில்களில் எப்படி துளசி முக்கியமானதாக உள்ளதோ அப்படி சைவகோயில்களில் வில்வம் முக்கியமானதாகும். எல்லா சிவன் கோயில்களிலும் இந்த வில்வமரத்தை நாம் காணலாம். வில்வ பத்ரத்தால் அர்ச்சனை செய்தால் சகல பாவமும் தீரும் என்பது நம்பிக்கை ஸ்ரீலக்ஷ்மியை வில்வபத்ரத்தால் அர்ச்சித்தால் பல நன்மைகள் கிடைக்கும் என்பது சகலரும் அறிந்த உண்மை. வில்வ இலைகளால் பெருமாளை அர்ச்சிப்பது விஷேஷம் என்பது பலரும் அறியாத உண்மை. நமது ஸ்ரீ வைகாநஸ ஸாஸ்த்ரப்படி பௌண்டரீக ஹோமங்களில் இந்த வில்வ பத்ரம் முக்கியமானதாகிறது. முள்ளுடன் இருக்கும் இந்த மரத்தின் கிளைகளில் பழங்கள் பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். இந்த வில்வ பத்ரத்தை சிவன்கோயில் வாசல்களில் (துளசி மாலைகள் போல) விற்பனை செய்வார்கள். இவ்வளவு சிறப்புமிக்க வில்வத்தின் இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வேர், பிசின், பட்டை, காய் ஓடு, ஆகியன மருத்துவ பொருளாக நமக்கு பயன்படுகிறது. இதளை குசாபி, கூவிளம், கூவிளை, சிவத்துடுமம் என (வில்வத்தினை) வேறுபெயர்களால் அழைப்பர். இத்தகைய சிறப்பு மிக்க வில்வத்தின் பயனை சற்று பாப்போம்.

1. வில்வ இலையைத் தேவையான அளவு கொண்டு வந்து உரலில் போட்டு இடித்து பிழிந்த சாறு 1 டம்ளர் எனில் அதற்கு சரியாக ½ டம்ளர் அளவு துளசி இலை சாறும் நன்று கலந்து 1 டம்ளர் அளவு தேங்காய் எண்ணெய் விட்டு அடுப்பில் இட்டு நன்றாக காய்ச்சவும் எண்ணெய் நன்கு காய்ந்தவுடன் இறக்கி வடிகட்டி பாட்டிலில் இட்டு வைத்துகொண்டு தலைக்கு தடவிவர (தலைக்கு தேங்காய் யெண்ணை தடவுவதுபோல்) மூக்கடைப்பு குணமாகும். மூச்சுவிட கஷ்டபடும் நிலை மாறும்.

குறிப்பு:- மழைக்காலத்திற்கு கையில் வைத்துள்ள தேவையான மருந்து.

2. மேற்படி மருந்தில் தேங்காயெண்ணைக்கு பதில் நல்லெண்ணை சேர்த்து காய்ச்சி தலைக்கு தடவி வரலாம். தினமும் காலை வேளையில் தேக்கரண்டி அளவு எண்ணெய் எடுத்து வாயில் விட்டு தொண்டை வரை போய்வரும்படி பலமுறை கொப்பளிக்கவும். இறுதியில் எண்ணெய்யை துப்பி விடவும். இவ்விதம் செய்வதால் தொண்டையில் வளரும் சதை வளர்ச்சி (டான்ஸிலிட்டிஸ் அறுவை சிகிச்சை இன்றி குணமாகும்.

3. இதன் காயை பசுவின் பால்விட்டு அரைத்து தலைக்கு தேய்த்து நீரிட (குளிக்க) மண்டை சூடு, கண்ணெரிச்சல் நீங்கி கண்கள் குளிர்ச்சியடையும்.

4. மேற்படி காயினை வெட்டி வெயிலில் உலர்த்தி பொடிசெய்து சிறுவர்கட்கு 2 கிராம் பெரியவர்கட்கு 4 கிராம் அளவு தினம் இருமுறை கொடுக்க ரத்தபேதி, சீதபேதி நிற்கும்.

5. வில்வ பழம், கார்போக அரிசி, வெந்தயம் வகைக்கு 50 கிராம் எடுத்து பசுவின் பால் விட்டு அரைத்து 1 லிட்டர் எண்ணெயிற் (நல்லெண்ணை) கலக்கி சிறு தீயில் இட்டு எரித்து வடித்து தலைமுழுகி வர கண்ணெரிச்சல், தலைவலி (அடிக்கடி தலைவலி வருபவர்கட்கும்) உடல்சூடு மூளையை பற்றிய நோய், உடலுக்கு அழகும் வன்மையும் தரும்.

6. காதிலே சீழ்வடிகிறதா கவலைப்படவேண்டாம். வில்வ பழசதை 50 கிராம் அளவு எடுத்து அத்துடன் வேப்பெண்ணை 200 கிராம கலந்து அடிப்பில் ஏற்றி காய்ச்சி ஒரு சீசாவில் பத்திரப்படுத்தி கொள்ளவும். தேவையான பொழுது சில துளிகள் காதில் விட்டு பஞ்சை அடைத்துக் கொள்ள இரண்டு மூன்று தினங்களில் நோய் நிவர்த்தியாகும்.

7. அக்கினி மந்தம், அரோசிந்தி சாரம் ,விக்கல், நிற்கரிய பித்தசுரம், நீள்வாந்தி, கட்கநோய் அகிய நோய் ஏகும் அழகோடு புஷ்டியுண்டாம்.

கோதில் வில்வ வேரதனைக் கொள் எனும் வாக்கியபடி இதன் வேரை மருத்துவமுறைப்படி கொள்ள பசித்தீக்கேடு, சுவையின்மை, பெருங்கழித்தல், விக்கல், அழல்சுரம் இடைவிடாது வாந்தி, உடல் இளைத்தல் ஆகியன நீங்கி உடற்கு அழகை வன்மையும் தரும்.

இத்தகைய சிறப்பு மிக்க விவ்வத்தினை போற்றுவோம். பயன்படுத்துவோம். **தொடரும்**



நம் பத்திரிகையின் 2ம் ஆண்டு துவக்கவிழா காக்ஷிகள்
Photo by: M.M.B.

மணமாலை

மணமகன் தேவை

F71: காஸ்யபம், உத்திரட்டாதி, 30.8.69, 31 வயது, +2, Teacher training passed, 5 அடி, ஆசிரியை. சம்பளம் ரூ.1000/- தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர்/அர்ச்சகர். முகவரி: ஸ்ரீ.S. இராகவ பட்டாச்சார், வானாதிராஜபுரம் P.O. மல்லியம் Via. Pin. 609 806.

F72: வாசிஷ்டம், பூரட்டாதி, 10.7.74, 25 வயது. B.Com., Type Eng. Higher, 5.2" தேவைப்படும் வரன்: பணியில் உள்ளவர். முகவரி. ஸ்ரீ S. வரதராஜ பட்டாச்சார், 6/680, விக்னேஷ் நகர், திருவள்ளுவர் அவென்யூ, பிச்சாண்டார் கோயில், திருச்சி Dt. 621 216. Ph.No.0431-591351

F-73: கௌதமம், ரோகிணி, 5.6.78. 21 வயது. B.Com., III year, 5.5" தேவைப்படும் வரன், பணியில் உள்ள பட்டதாரி. முகவரி: ஸ்ரீ K.N. அனந்தகிருஷ்ணன், 4, T.L. ரகுபதி தெரு, ராதா நகர், குரோம்பேட்டை, சென்னை-600 044. Ph. 044-241 0948

F74: காஸ்யபம், மூலம், 6.5.77, 22 வயது, +2 typing, computer knowledge,. 5'6''. தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி பட்டாச்சார், கோவில் அர்ச்சகர், கீழ் வீராணம், பாணாவரம் (Via) அரக்கோணம்-632505.

F75: ஆத்ரேயம், அனுஷம், 18.7.75, 24 வயது, B.Sc., P.G.D.C.A. I.C.S.S. Doing DSAT with C.M.C. 5'2''. தேவைப்படும் வரன் பணியில் உள்ள பட்டதாரி, (any professional degree) முகவரி. Sri. A. Rangacharyulu, A-2, Deevee Apartments, Navodaya Colony, 1st Parrelal Lane to Bank Colony II Road, Vijayawada-520008. Ph.(0866-484876, 435393. (ஆங்கிலத்தில் கடிதம்எழுதி தொடர்பு கொள்ளவும்).

F76: கௌதமம், பூரம். 6.1.72, 27 வயது. S.S.L.C. தையல். தேவைப்படும் வரன். பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீ P.R. லக்ஷ்மீநாராயண பட்டாச்சார், 1/82, அக்ரஹாரம், வாளாடி, திருச்சி Dt. 621218.

F.77. காஸ்யபம். அஸ்தம், 21.11.73, 27 வயது (செவ்வாய் தோஷம்) B.Com., DCCP, Shorthand Eng. 5' 4" தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர்/ அர்ச்சகர், முகவரி.ஸ்ரீ. A.V. ஸ்ரீனிவாஸாச்சார்யுலு, No.12, R.N.மாட வீதி, திருப்பதி- A.P. 517507 Ph.No. (08574) 28814

F.78: ஆத்ரேயம், திருவோணம், 30.10.76, 23 வயது. +2, 150cm, தனியார் துறை (ஓசூர்) சம்பளம் ரூ.10,000/- தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர் முகவரி:- ஸ்ரீ V.ரமாமணி பட்டாச்சார் அருவாப்பாடி (P.O) நீடுர்(Via) மையிலாடுதுறை, நாகை DT. 609 203 Ph.No. (04364) - 27528

F.79: காஸ்யபம், பூரம் - 1-4-77, 22 வயது. B.Sc, 5'3" தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர் முகவரி. ஸ்ரீ.T. ஸ்ரீனிவாச பட்டாச்சார், 2184, V.P. கோவில் தெரு, நாலு கால் மண்டபம், தஞ்சாவூர் Dt. 613 009.

F-80: கௌதமம், உத்திராடம், 9.7.71, 28 வயது, B.Com, 5 அடி தனியார் துறை சம்பளம் ரூ. 1,000/- தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர் முகவரி: ஸ்ரீ R. வெங்கட்ராம பட்டாச்சார், பெருமாள் சன்னிதி அர்ச்சகர், பாண்ட மங்கலம், நாமக்கல் Dt. 637208 P. (04268) 23797

F-81: பார்கவம், ஹஸ்தம், 1.11.64 35 வயது, S.S.L.C. 5 அடி தேவைப்படும் வரன். அர்ச்சகர்: - முகவரி: ஸ்ரீ. ப்ரசன்ன வெங்கட்ராம பட்டாச்சார், பெருமாள் சன்னிதி அர்ச்சகர், ஆத்தூர் கோட்டை, P.O. சேலம்

F-82: காஸ்யபம், ரேவதி, 16.7.70, 29 வயது, B.A. Typewriting. 5 அடி தேவைப்படும் வரன், பணியில் உள்ளவர், முகவரி: ஸ்ரீ சம்பத பட்டாச்சார், C/o. C. கண்ணன் (C.W.C) அக்ரஹாரம், கல்யாணபுரம் P.O. தஞ்சாவூர் Dt. Ph. 043621 61852

*F.24: பார்கவம், புனர்வசு, 2.3.75, 24 வயது. M.Sc., Type both higher, தேவைப்படும் வரன் பணியில் உள்ள பட்டதாரி, முகவரி, ஸ்ரீ R. கல்யாண வெங்கடேச பட்டாச்சார், 1/28, பெருமாள் கோயில் தெரு, கருங்குளம் P.O. தூத்துக்குடி Dt. 628 615.

*F-27: வாசிஷ்டம், உத்திரட்டாதி, 26.4.76, 24 வயது, B.A. His. B.A., Hindi, Type Eng. Lower. 149 cm. தேவைப்படும் வரன் பணியில் உள்ள பட்டதாரி, முகவரி: ஸ்ரீ V. சீதாராம பட்டாச்சார், 1530, மேல அலங்கம், தஞ்சாவூர் Dt. 613 009. Ph.No. 74063.

*F-29: பாரத்வாஜம், ஸ்வாதி, 16.11.71. 28 வயது. M.Com., Type & Shorthand. 5 அடி, தனியார் துறை சம்பளம் ரூ.1.500/- தேவைப்படும் வரன் பணியில் உள்ள பட்டதாரி. முகவரி: ஸ்ரீ R. ஜனகராஜ பட்டாச்சார், பெருமாள் கோவில் அர்ச்சகர், நாரணமங்கலம் P.O. பெரம்பலூர் Dt.621 126

*F-40: கௌதமம், உத்திரம், 2.11.72. 27 வயது. +2 (B.A.Hindi) 5 அடி. தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீ P.R. முத்து கிருஷ்ண பட்டர், அர்ச்சகர், நகர் P.O. ஆங்கரை வழி: திருச்சி - 621 703

*F-49: கௌதமம், அனுஷம், 15.8.75, 25 வயது, M.A.,P.G.D.C.M. 5'3". English type, தனியார் துறை சம்பளம் ரூ.2500/- தேவைப்படும் வரன் பணியில் உள்ள பட்டதாரி. முகவரி: ஸ்ரீ K.N. அனந்தகிருஷ்ணன், 4, T.L. ரகுபதி தெரு, ராதாநகர், குரோம்பேட்டை, சென்னை-600 044. Ph.No. 044-2410948

* F-53: காஸ்யபம். சித்திரை, 10.3.74, 25 வயது, B.Sc.,P.G.DBA,DCA, தனியார்துறை சம்பளம் ரூ.3,500/- தேவைப்படும் வரன் பணியில் உள்ள பட்டதாரி. முகவரி: ஸ்ரீ V. கோபாலகிருஷ்ணன், 1-C, மணிமேகலை தெரு, ராஜாஜி நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை-600 043. Ph.No.044-2413211

*F3: காஸ்யபம் அவிட்டம் 30 வயது, ஐந்தாம் வகுப்பு 5'2'' தேவைப்படும் வரன் அர்ச்சகர்/பணியிலிருப்பவர். முகவரி: ஸ்ரீ K.A. துரை பட்டாச்சார், 24, எல்லையம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033. Ph. 044-4710036

*F4: காஸ்யபம், மிருகசீர்ஷம் 13.3.73, 27 வயது M.A., (B.Ed.,) 5'3'' தேவைப்படும் வரன், பணியில் உள்ள பட்டதாரி. முகவரி: ஸ்ரீ K.A. துரை பட்டாச்சார், 24, எல்லையம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம்,சென்னை-33. Ph. 044-4710036

*F.16: பாரத்வாஜம், சதயம், 13.01.98, 22 வயது 10 வவது, 5 அடி, தேவைப்படும் வரன் அர்ச்சகர்/பணியில் இருப்பவர் முகவரி. ஸ்ரீ.P.T.ராமதுரை பட்டாச்சார், பன்பாக்கம் கிராமம், கவரைப்பேட்டை P.O. கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் Dt.601 206

*F-11: கௌதமம், ரேவதி, 27 வயது, 8 வது, 5 அடி, தேவைப்படும் வரன் அர்ச்சகர் முகவரி: ஸ்ரீ G. நரசிம்மபட்டாச்சார், பெருநகர் Village P.O. (Via) உத்திரமேரூர் - 603404

மணமகள் தேவை

M-52. கௌசிகம், ஸ்வாதி, 25.4.75, 25 வயது, S.S.L.C. 5'6" அர்ச்சகர் & தனியார் துறை, சம்பளம் ரூ.3000/- தேவைப்படும் வதூ. குடும்பத்திற்கு ஏற்ற பெண். முகவரிஸ்ரீ K. வெங்கட்ராமன், 4, ஜோதிராமலிங்கம், 2 வது தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

M-53. ஆத்ரேயம், ஸ்வாதி, 26.10.73, 26 வயது. ஒயர்மேன் லைசன்ஸ், தனியார்துறை சம்பளம் ரூ.2500/- தேவைப்படும் வதூ அழகிய குடும்ப பாங்கான பெண். முகவரி: ஸ்ரீ S. கல்யாணராம பட்டர், 3, சஞ்சீவி அநுக்கிரஹம், அக்ரஹாரம், மோகனூர். S.O. நாமக்கல் Dt. 637 015

M-54: காஸ்யபம், கிருத்திகை, 27.6.73, 26 வயது. 10 வது, 5'6'' தனியார் துறை சம்பளம் ரூ.2000/- தேவைப்படும் வதூ குடும்பத்திற்கு ஏற்ற பெண். முகவரி: ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி பட்டாச்சார், கோவில் அர்ச்சகர், கீழ் வீராணம், பாணாவரம் (Via) அரக்கோணம்-632505.

M.55: ஆத்ரேயம், பூரட்டாதி, 5.3.73, 26 வயது, B.Tech. Computer Dip. 1996 வருடம் முதல் அமெரிக்காவில் பணிசெய்கிறார். 5'5''. தேவைப்படும் வதூ. படித்த, அழகிய, குடும்பப்பாங்கான பெண். (வெளிநாட்டிற்குச் செல்ல விருப்பப்படுகிறவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். மேலும் ஆங்கிலத்தில் கடிதம் எழுதி தொடர்பு கொள்ளவும்) முகவரி. Sri. A. Rangacharyulu, A-2, Dee-vee Apartments, Navodaya Colony, 1st Parrelal Lane to Bank Colony II Road, Vijayawada-520008. Ph.(0866-484876, 435393.

M.56: ஆகஸ்த்யம், கேட்டை 11.9.67, 32 வயது, 10வது, Tv.Mechanism & Type Eng. 6 அடி, தனியார் துறை. சம்பளம் ரூ.2000/- தேவைப்படும் வதூ. குடும்பத்திற்கேற்ற பெண். முகவரி. ஸ்ரீ. C.K. ஸ்ரீனிவாச பட்டாச்சார், 26, அக்ரஹாரம் தெரு, சிந்தாதரிப்பேட்டை, சென்னை - 600 002. Ph: (044) 8416257

M-57 காஸ்யபம், ஹஸ்தம், 8.12.74., 25 வயது, B.Com, 5'10'' தனியார் துறை. சம்பளம் ரூ. 2900/- தேவைப்படும் வதூ. படித்த குடும்ப பாங்கான பெண். முகவரி: ஸ்ரீ A. சுந்தர பட்டாச்சார், 8-71 A, மேலபெருமாள் கோவில், புதுவயல் (P.O.) சிவகங்கை Dt.

*M-15: ஆத்ரேயம், உத்திரட்டாதி, 7.8.74, 26 வயது, S.S.L.C. 5'6". அர்ச்சகர் சம்பளம் ரூ.5000/- தேவைப்படும் வதூ குடும்பப் பாங்கான பெண். முகவரி: ஸ்ரீ S. கோவிந்தராஜ பட்டாச்சார். தெற்கு வீதி, ஒப்பிலியப்பன் கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர். Dt. 612 204

*M-21: பார்கவம், சதயம், 21.10.69, 30 வயது, M.Sc., B.Ed., ஆசிரியர் மத்திய அரசு பள்ளி, சூரத், சம்பளம் ரூ.10,000/- தேவைப்படும் வதூர். பட்டதாரியான பெண். முகவரி ஸ்ரீ S. பார்த்தஸாரதி பட்டாச்சார், 1-53A, அக்ரஹாரம், முத்தரசநல்லூர், திருச்சி Dt. 620 101, Ph.No. 0431-685369.

*M-40: ஆத்ரேயம், அனுஷம், 17.8.72. 28 வயது.S.S.L.C. 5 1/2" வங்கி ஊழியர், தேவைப்படும் வதூ அழகிய குடும்பப் பாங்கான பெண். முகவரி: ஸ்ரீ R. கோதண்டராம பட்டாச்சார், ஸ்ரீவித்யா மந்த்ர பூஷணம், ஆனந்ததாண்டவபுரம், மயிலாடுதுறை Tk. நாகை Dt. Ph.No. 23925

*M1: காஸ்யபம், மிருகசீர்ஷம், 40 வயது, 8 வது 5'3'' அர்சகர் மற்றும் சைக்கிள் கடை உரிமையாளர். மாதவருமானம் ரூ.2000/- தேவைப்படும் வதூ, குடும்பத்திற்கேற்ற பெண். முகவரி: ஸ்ரீ K.A. துரை பட்டாச்சார், 24, எல்லையம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33.

*M.10: பாரத்வாஜம், அவிட்டம், 11.10.70, 30 வயது. 10 வது 5'5'' உயரம் அர்ச்சகர் சம்பளம் ரூ.3000/- தேவைப்படும் வதூ குடும்பத்திற்கேற்ற பெண் - முகவரி.ஸ்ரீ P.T.ராமதுரை பட்டாச்சார், பண்பாக்கம் கிராமம், கவரைப்பேட்டை P.O. கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் Dt 601 206.

*M28: காஸ்யபம், சித்திரை, 12.9.72, 27 வயது, 10 வது 5'6'' அர்ச்சகர், சம்பளம் ரூ.3000/- தேவைப்படும் வதூ. குடும்பத்திற்கேற்ற பெண். முகவரி: ஸ்ரீ S. நாராயண பட்டாச்சார், 22, கூடல் அழகப் பெருமாள் கோவில் தெரு, மதுரை-625 001. Ph.(0425)-735601

*M-6 காஸ்யபம், ரோஹிணி, 17.5.69, 30 வயது, B.Com. A.I.C.A. 5'5'' தனியார்துறை சம்பளம் ரூ. 2,200/- தேவைப்படும் வதூர். பணியிலுள்ள படித்த அழகிய குடும்பபாங்கான பெண். முகவரி: ஸ்ரீ N.S. ரவிபட்டாச்சார், அர்ச்சகர், 4/17, வடக்குமாட வீளாகம், சிக்கல் - 611108

குறிப்பு: இந்த பகுதியில் ஏற்கனவே வெளியிடப்பட்ட விளம்பரங்கள் குலஸ்வாமிகளின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் மூன்று மாதத்திற்கு வெளியிட உத்தேசித்துள்ளோம் தேவைப்படுவோர் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அதில் பழைய Sl.No. குறிப்பிட்டு அனுப்பவும்.

★ இக் குறியீடு செய்யப்பட்ட விளம்பரம் ஏற்கனவே வெளியானவை.

சதாபிஷேகம்

கொங்கரத்தி ஸ்ரீ உ.வே. K.N. லக்ஷ்மண அய்யங்கார் ஸ்ரீமதி நாராயணி அம்மங்கார் தம்பதிகளுக்கு 15.2.2000 அன்று கொங்கரத்தி ஸ்ரீவண்புகழ் நாராயணப் பெருமாள் சன்னிதியில் ஸதாபிஷேக மஹோத்ஸவம் நடைபெற்றது.

மணவாழ்த்து

சென்னை சூளை. ஸ்ரீ R. அனந்தகிருஷ்ணபட்டாச்சார் குமாரன் சிர. A. ரகுராமனுக்கும் சின்னவரிக்கம் ஸ்ரீ K. ஸ்ரீனிவாசபட்டாச்சார் குமாரத்தி சௌ. S. சித்ராவிற்கும் 9.2.2000 அன்று பள்ளிகொண்டானில் விவாஹம் வெகு சிறப்பாக நடைபெற்றது அச்சமயம் ரூ. 51/- பத்திரிகைக்கு சம்பாவனையாக வழங்கப்பட்டது.

திருச்சி Dt. நெய்குளம் ஸ்ரீ V. ராஜாராம பட்டாச்சார் குமாரத்தி சௌ. R. ராதாவிற்கும் சிவகங்கை புதுவயல் ஸ்ரீ C. ராகவ பட்டாச்சார் சகோதரன் சிர. C. வெங்கடேசனுக்கு 9.2.2000 அன்று சமயபுரத்தில் விவாஹம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

காஞ்சி Dt. காட்டாங்குளத்தூர் ஸ்ரீ. S. ராஜகோபால பட்டாச்சார் குமாரன் சிர. R. சேஷாத்ரிக்கும் அரியலூர், ஸ்ரீ D. ராமமூர்த்தி பட்டாச்சார் குமாரத்தி சௌ . R. பூமாவிற்கும் 21.2.2000 அன்று அரியலூரில் விவாஹம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மேற்கண்ட தம்பதிகள் நீடூழிநலமாக வாழ வாழ்த்துகிறோம். **ஸ்ரீவைகாநஸம், AKS Trust.**

உபநயனம்

காஞ்சி Dt இள்ளலூர் ஸ்ரீ K. ரங்கராஜ பட்டாச்சார் குமாரன் சிர. ஸ்ரீனிவாஸனுக்கு 21.2.2000 அன்று திருப்பதி திருமலை ஸ்ரீவைகாநஸ ஆஸ்ரமத்தில் உபநயனம் வெகுசிறப்பாக நடைபெற்றது. அச்சமயம் நம் பத்திரிகைக்கு ரூ.51/- ஸம்பாவனையாக வழங்கப்பட்டது.

திருச்சி Dt. குழுமணி. ஸ்ரீ B.S. முத்துக்ருஷ்ண பட்டாச்சார் குமாரன். சிர. ரகுராமனுக்கு 23.2.2000 அன்று குணசீலத்தில் உபநயனம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

காஞ்சி Dt. திருவிடந்தை (லேட்) ஸ்ரீ N.K. சம்பத் பட்டாச்சார் குமாரன் சிர. S. பார்த்தசாரதிக்கு 24.2.2000 அன்று சென்னை கோமளீஸ்வரன் பேட்டையில் உபநயனம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

திப்பிராஜபுரம் ஸ்ரீ R. வரதராஜ பட்டாச்சார் குமாரன் சிர. V. பாலாஜிக்கு 24.2.2000 அன்று திப்பிராஜபுரத்தில் உபநயனம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாலாஜா பேட்டை ஸ்ரீ. ராமக்ருஷ்ண பட்டாச்சார் குமாரன் சிர. R தீபப்பிரகாசனுக்கு 24.2.2000 அன்று வாலாஜா பேட்டையில் உபநயனம் வெகு சிறப்பாக நடை பெற்றது. மேற்கண்ட வடுக்களுக்கு எங்களின் மனமார்ந்த ஆசிகள் **ஸ்ரீவைகானஸம், AKS Trust**

ஆயுஷ்ஹோமம்

திருவள்ளூர் Dt. ஆயலூர் ஸ்ரீ. S. பார்த்தஸாரதி பட்டாச்சார் குமாரன் சிர. R. ஜானகிராமனுக்கு 2.3.2000 அன்று திருவள்ளூர் Dt. கனகம்மா சத்திரத்தில் வாஷ்வாதன ஆயுஷ்ஹோமம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அச்சமயம் நம் பத்திரிகைக்கு ரூ. 51/- ஸம்பாவனையாக வழங்கப்பட்டது. மேற்கண்ட குழந்தைக்கு எங்களின் மனமார்ந்த ஆசிகள்

ஸ்ரீவைகாநஸம் AKS Trust.

மணிஓசை - 3

மதுராந்தகம் தாலுக்காவில் கடுக்கலூர் என்ற ஒரு சிறிய கிராமம். ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள்; நின்ற திருக்கோலம். உபய நாசசிமாருடன் ஸேவை; வாருங்கள் உள்ளே போகலாம்! அடேடே! திருமஞ்சனம் நடக்கிறது போலும். சந்தனக்காப்பு ஸேவை கண்ணைக் கவர்கிறது. என்ன இது! கம்பீரமான இனிய குரலோசை! எங்கிருந்து வருகிறது? கர்ப்பக்கிருஹத்திலிருந்துதான்! பக்தர்கள் கூட்டம் மூச்சு விடவில்லை.

பள்ளியில் ஓதிவந்ததன் சிறுவன் வாயில் ஓர் ஆயிர நாமம் ஒள்ளியவாகிப் போத ஆங்கு அதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலானாகி எங்கு உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து இங்கில்லையா என்று அளந்திட்ட தூணை இரணியன் தட்ட அங்கு அப்பொழுதே அனல் விழிப்பேய்வாய் தெள்ளிய சிங்கமதாகி வாடாத வள்ளுகிரால் பிளந்து தன் மகனுக்கு அருள் செய்த எம்சிங்கப் பிரானே - அடடா! அருளிச் செயல் தரும் அழகிய சிங்க வர்ணனை மிகமிக அற்புதம்!

இந்தக் கட்டியத்தை வழங்கியவர் ஸ்ரீ உ.வே. மணிவண்ண பட்டாச்சாரியார் ஸ்வாமி. ஸ்ரீவைகானஸ ஆகம விற்பன்னர். ஸ்ரீ சுதர்ஸன உபாஸனாரத்நம். ஸ்ரீ உ.வே. ஸ்ரீனிவாஸ பட்டாச்சாரியார் தகப்பனார்; தாயார் ரங்கனாயகி அம்மாள். கடுக்கலூர் பரம்பரையே பாராட்டிற்குரியது. ஸ்ரீ உ.வே. பார்த்தசாரதி பட்டாச்சாரியார் ஸ்வாமி திருமலை ஸம்புரோக்ஷணத்தில் குண்டலம், சால்வை பெற்றர். (100 ஆண்டுகளுக்கு முன்) அதே பரம்பரையில் வந்த ஸ்ரீனிவாச பட்டாச்சார் ஸ்வாமி அஷ்டபந்தனம் தயாரிப்பதில் பெயர் பெற்றவர். ஸம்புரோக்ஷணங்களிலும் நிர்வாகத் திறமையிலும் வல்லவர். ஸ்ரீமத் ராமாயண பராராயணம் நித்யமாகக் கொண்டவர். ஸ்ரீமான் மணிவண்ண பட்டாச்சாரியார் செயல் வீரர்; பல பெரியோர்களிடம் நெருங்கிப் பழகி ஞானம் பெற்றவர்; இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் வளவனூர் நரசிம்ம பட்டாச்சாரியார், ஸ்ரீவில்லிப்புத்தூர் அலங்கார பட்டாச்சாரியார், திருமுக்கூடல் நரசிம்ம பட்டாச்சார்,

திருவிண்ணகரம், திருச்சித்திரகூடம், இவரது இளமைக் காலத்தில் கைங்கர்யம் செய்த திவ்ய தேசங்கள். திருமலையில் பவித்ரோத்ஸவம், புஷ்பயாகம் பத்மாவதி பரிணயம், ஜேஷ்டாபிஷேகம் என பல உத்ஸவங்களில் அன்வயித்து வருபவர். பல ஸம்புரோக்ஷணங்களில் அன்வயிப்பதுடன் புருஷகாரியாக இருந்து நிர்வகித்தவர்.

கடுக்கலூர் ஸந்நிதியை பல லக்ஷம் செலவில் அற்புதமான தூமணி மாடக் கோயிலாக ஆக்கியதுடன் நித்ய திருவாராதனத்துக்கும் ஏற்பாடு செய்து வருபவர். ஸ்ரீ சுதர்ஸனாழ்வார், ஸ்ரீவிகநஸாசார்யர் ஸந்நிதியை நூதனமாக உருவாக்கியுள்ளார்.

சென்னை நாட்டு சுப்பராய தெரு (மயிலை)வில் தமிழகமே பாராட்டும் வகையில் கடந்த 25 ஆண்டுகளாக ஹனுமத் ஜயந்தி மஹோத்ஸவம் நடத்தி வரும் ஸ்வாமி தமிழில் மட்டுமன்றி தெலுங்கிலும் உபந்யஸித்து வருபவர். 1978 ல் கவர்னர் பிரபுதாஸ் பட்வாரியினால் சால்வை அணிவித்து கௌரவிக்கப் பட்டவர். நூற்றுக்கணக்கான ஸுதர்ஸன ஹோமங்கள் செய்துள்ள இவர் தனியாக ஆஸ்திகர்களின் வேண்டுகோளுக்கிணங்க தனியாக திருக்கல்யாண மஹோத்ஸவங்களை சிறப்பாக நடத்தித் தருகிறார். இதைப் பாராட்டி ஆனந்தவிகடனில் அறுசுவையரசு நடராசய்யர் கட்டுரை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இவரது குமாரர்கள் அனைவரும் அர்ச்சகர்களாக இருக்கின்றனர் என்பது பாராட்டிற்குரியது. இவருக்கும் பல்லாண்டு பாடி மகிழ்வோமாக!

''விகனஸப்ரியன்''

(தொடரும்)

ததீயாராதனம் பரம்

வைகானஸ பாரத்வாஜ **ஸ்ரீ.உ.வே.S. கோபால கிருஷ்ண பட்டாச்சாரியர்**, பொன்னேரி

ஒரு தெய்வத்தையும் வணங்காமல் நாஸ்திகனாக இருப்பவனைவிட ஏதோ ஒரு தெய்வத்திடம் பக்தியுடையவன் மேலானவன். மற்ற எந்த தெய்வத்தையும் அடையாமல் ஸ்ரீமந்நாராயணனையே வணங்கி கைங்கர்யம் செய்பவன் சிறந்தவன்.

ஸ்ரீமன் நாராயணனை வணங்கி கைங்கர்யம் செய்வதோடு அவனுக்கு கைங்கர்யம் செய்வதையே கார்யமாக கொண்டு வாழ்ந்து வரும் ததீயர்களை ஆராதிப்பது மிகவும் சிறந்தது. பெரும்பாலான விஷ்ணு ஆலயங்களில் அர்ச்சகர்கள் அர்ச்சா கைங்கர்யம் தவிர வேறு எந்த தொழிலும் செய்வதில்லை.

ஸர்வேஜனா: காஞ்சனமா ஸ்ரயந் என்கிறபடி தற்காலத்தில் பணம், பணம் என்று தனத்தைத் தேடி அலையும். இக்காலத்தில் கைங்கர்யத்தையே பிறவிப் பயனாகப் பெற்று எவ்வளவு வறுமை இருந்த போதிலும் தன்னையும் தன் குடும்பத்தையும் வசதியாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று எண்ணாமல் **பெருமாள் கைங்கர்யத்தை விடக்கூடாது** என்கிற திட ஸங்கல்பத்துடன் எத்தனையோ வைகானஸ அர்ச்சகர்கள் வாழ்ந்து வருகின்றனர். 108 திவ்ய தேசங்களில் பெரும்பாலானவை வைகானஸர்களால் ஆராதிக்கப்படும் க்ஷேத்திரங்களாகும். இது தவிர பல கிராமங்களில் விஷ்ணு கோவில்களில் வைகானஸர்களே அர்ச்சகர்களாய் இருக்கின்றனர். **பெரும்பாலான கோவில்களில் அர்ச்சகர்களுக்கு சம்பளமே கிடையாது** என்கிற உண்மை பலருக்குத் தெரியவே தெரியாது. இன்னம் சில கோவில்களில் ஒரு மாதத்திற்கு பத்து ரூபாய்க்கும் குறைவான சம்பளம் எப்போதோ ஏற்பாடு செய்யப்பட்டது நீடிக்கிறது. கோவில் நிலங்கள் மான்யங்கள் எல்லாம் பிறர் கைப்பற்றிக் கொண்டு குத்தகையே தருவதில்லை என்ற காரணத்தால் நித்யபடி நிவேதனத்துக்காக கொடுத்து வந்த பிரசாதத்துக்கான படித்தனங்களும் நிறுத்தப்பட்டுள்ளன அல்லது வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன. பல கோயில்களில் பல ஆண்டுகளாய் அர்ச்சகர்களுக்கு சம்பளமோ, படித்தனமோ வழங்கப்படாமலே உள்ளது அர்ச்சனை சீட்டு விற்பனை தொகையில் மிகக் குறைவான பாகம் அர்ச்சகர்களுக்கு ஏற்பாடாகி யிருக்கிறதையும் அதிகாரிகள் உடனுக்குடன் வழங்குவதில்லை. அதைப் பெறுவதற்கு அர்ச்சகர்கள் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களை அடைய வேண்டியுள்ளது என்பதை அந்த பெருமாளே அறிவார்!

சில நகரத்துப் பெரிய கோயில்களில் விஸேஷ நாட்களில் பெரும் அளவில் பக்தர்கள் வரிசையில் நின்று ஸேவிக்கிறார்கள். அதிக நேரம் நின்று தவிக்காமல், இடையில் புகுந்து உள்ளே நுழைவதற்காக அங்குள்ள காவலருக்கு ரூ.5 (அ) ரூ10 கொடுத்து உள்ளே வருபவர்கள் கூட அர்ச்சகர் தட்டில் ஒரு ரூபாய்க்கு மேல் சமர்ப்பிப்பதில்லை. இம்மாதிரி பெரிய நகரத்துக் கோவில்களில் சன்னிதியில் தட்டேந்தி நிற்கும் அர்ச்சகர்களுக்கு கிடைப்பதை விட வாசலில் கையேந்தி நிற்கும் காவலர்களுக்கு கிடைக்கும் வருமானம் அதிகமாக உள்ளது. ஆக பகவானின் அர்ச்சா கைங்கர்யத்தில் தன்னை அர்ப்பணித்துக்

கொண்டுள்ள அர்ச்சகர்களுக்கு சம்பளமும் இல்லை படித்தனமும் இல்லை. அர்ச்சனை சீட்டு வருமானமும் இல்லை நிவேதன ப்ரசாதங்களில் படியும் இல்லை என்ற நிலையில் விஷ்ணுவை ஆராதிப்பவர்கள் உள்ளனர். இவர்கள் இதை சொல்லிக் கொள்ளவும் இயலவில்லை. அர்ச்சகர்கள் தான் ''ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி'' கைங்கர்யம் செய்கிறார்கள் மற்ற கோயில் பணியாளர்களுக்கெல்லாம் நல்ல சம்பளம் உண்டு வருடாந்திர ஊதிய உயர்வு உண்டு, கடன் வசதிகள் உண்டு வைத்திய செலவுகள் ஈடு செய்யப்படுவது உண்டு. இவைகள் ஒன்றுமே கிராமங்களில் அர்ச்சகர்களுக்கு இல்லை. ஹரியை ஆராதிப்பதற்கென்றே பிறந்தவர்கள் வைகானஸர்கள். இந்த ஆராதனை செய்யும் பாக்கியம் தனக்கும் கிடைக்க வேண்டு மென்று ஆழ்வார் வேண்டுகிறார்.

''திருமாலே நின்றே ஆட் செய்ய நீ நினைப்பது தான் என்றே''

பொன்வட்டில் பிடித்துப் புகப்பெறுவேன் ஆவேனோ பகவத் ராமானுஜரும் ஸ்ரிய காந்தோ ய: தத் பாதாப்ஜே மம மந: பரிசரண ஸக்தம்பவது என்று பாரிக்கிறார்.

எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமேயாவோம், உனக்கே நாம் ஆட் செய்வோம்'' என்பது ஸ்ரீ ஆண்டாளின் வேண்டுதல்.

மேலே குறித்த படி மற்றைய காமங்கள் எதுவும் இல்லாமல் கைங்கர்யத்தில் ஊன்றி இருப்பவர்களே வைகானஸ அர்ச்சகர்கள்.

ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்திரப் படியும், ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளின் படியும், பகவத் ராமானுஜரின் திருவுள்ளப் படியும் அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் விஷ்ணு கைங்கர்ய பரர்களாய் வாழ்ந்து வருபவர்கள் வைகானஸர்கள். இப்போதுள்ள நிலை என்ன வென்றால் விஷ்ணு ஆலயங்களைப் போலவே விஷ்ணுவை அர்ச்சிப்பவர்களும் ஆதரவற்ற நிலையில் உள்ளனர்.

ஆனால் சாஸ்திரமோ ''ஆராதனானாம் ஸர்வேஷாம் விஷ்ணோ ராராதனம் பரம் தஸ்மாத்பரதரம் ப்ரோக்தம் ததீயாராதனம் பரம்''.

மற்ற தேவதைகளை ஆராதிப்பதை விட விஷ்ணுவை ஆராதிப்பது மேலானது. அதைவிட விஷ்ணுவைச் சேர்ந்த கைங்கர்ய பரர்களை ஆராதிப்பது மிகச்சிறந்தது என்று கூறுகிறது.

எனவே அர்ச்சகர்களை ஆராதிப்பது, அவர்களுக்கு உதவுவது விஷ்ணுவை ஆராதிப்பதை விட சிறந்தது என்பதை ஆஸ்திகர்கள் ஒவ்வொருவரும் உணரவேண்டும். ஒரு விஷ்ணு ஆராதகன் குடும்ப சம்ரக்ஷனை இல்லாமல் வறுமையில் கண்ணீர் வடித்தால் க்ராம யஜமானயோர் நாசம்பவதி ராஜா ராஷ்ட்ரம் விநச்யதி என்றெல்லாம் வைகானஸ சாஸ்திரம் எச்சரிக்கிறது.

இவ்வளவையும் அறிந்த பின்னரும் பகவானின் ததீயர்கள் ஆதரிக்கப்படவில்லை என்றால் புத்தி:கர்மானுஸாரிணீ என்கிறது நியதி. நமக்குப் புண்ணியமிருந்தால் தான் நம்முடைய தனம் ஸத்துகளுக்குப் பயன்படும். அர்ச்சகர்கள் அழுவதற்கும் பகவான் திருவடிகள் தவிர வேறு புகல் இல்லாதவர்கள்.

ததீயர்களான ஆராதகர்களை ஆதரியுங்கள். பகவான் ரக்ஷிக்கட்டும்.

சுபம்

வடமொழி அகராதி - 2

அநீகः - படை
அநீகம் - படை, சண்டை, வர்கம்
அநீஶ்வர - தலைவனில்லாத, நாஸ்திக
அநு - பின்னால், கூட, க்ரமமாக,
அனுகூல - ஆதரவான, இசைந்த
அனுக[4]த - பின்தொடரப்பட்ட, பணிவிடை செய்யப்பட்ட
அநுக[3]மனம் - பின்தொடர்ந்து செல்லல், ஸ்த்ரீகள் இறந்த கணவனுடன் உடன்கட்டை ஏறுதல்
அனுகு[3]ண - ஸமமான குணங்களையுடைய
அனுசர் - பின் செல்ல, கூடச்செல்ல
அனுசரः - பின் தொடர்பவன், வேலைக்காரன், தோழன்
அனுசித - தவறான, தகாத
அனுஜः - தம்பி
அனுக்[3]ஞா - அனுமதி, ஸம்மதம், உத்தரவு
அனுத்தம - எல்லாவற்றிற்கும் மேலான, மேம்பட்ட
அனுத்தர - முக்யமான, மிக மேலான
அநுபம
அனுபமித } - இணையற்ற, ஒப்பில்லாத
அனுபமேய }
அனுபானம் - மருந்துடன் குடிக்கப்படும் திரவப் பொருள்
அனுபூர்வ - ஒழுங்கான, முறையான
அனுப[3]ந்த[4]ः - கட்டுதல், தொடர்பு, பயன் சேர்த்தல்
அனுப[4]வः
அநுபூ[4]தி } - நேரிட்ட அறிவு, அனுபவம்
அனுமதி - அனுமதி, ஒப்புதல்
அனுமானம் - ஊஹம், அனுமானம், உவமை
அனுராக[3]ः - அன்பு, பக்தி, பாசம், சிவப்புத் தன்மை
அனுவாத[3]ः - திரும்பச் செய்தல், விளக்குதல், திரும்பச் சொல்லுதல்
அனுஶாஸனம் - கட்டளை, உத்திரவு
அனுஷ்டா[2]னம் - கார்யம் செய்தல், செயல்முறை, மதம் சம்பந்தமான, கார்யங்களின் செயல்
அநுஸந்தா[4]னம் - நன்கு விசாரித்தல், ஆழ்ந்து சோதித்தல்
அந்ருதம் - பொய்
அநேக - பல அநேகமான
அநேகஶः - அடுத்தடுத்து பலவிதங்களில் அதிக அளவில்
அந்த - அருகிலுள்ள கடைசி, அழகான
அந்தः - முடிவு, எல்லை,சாவு, அழிவு, ஒரு சொல்லின் கடைசி எழுத்து
அந்தகः - சாவு, யமன்
அந்ததः - ஓரத்தில் கடைசியாக, முடிவாக
அந்தர - உள்ளிருக்கும், அருகில், தொடர்புள்ள, ஸமானமான, ஒன்றிலிருந்து வேறுபட்ட
அந்தரிக்ஷம் - ஆகாயத்திற்கும் பூமிக்குமிடையே உள்ள ப்ரதேசம், வாயுமண்டலம்

அந்த[4] - குருடான

அந்நம் - உணவு, சாதம்

அந்யதஃ - மற்றொன்றிலிருந்து வேறொன்றான

அந்யதர - இருவர்களில், இருவஸ்துகளில் ஒன்றான

அந்யத்ர - வேறு ஒரு இடத்தில், வேறு ஒருகாலத்தில்

அந்யதா[2] - இல்லாவிடில், வேறு வழியில், ஒன்றிலிருந்து, வேறுபட்டதாக

அந்யே 3 த்யுஃ - மற்றொருநாள், அடுத்த நாள்

அந்யோன்ய - ஒன்றோடொன்றிணைந்த

அன்வயஃ - இலக்கணத்தை யொட்டின சொற்களிடையேயுள்ள தொடர்பு, பின் செல்லுதல், பரிவாரம்,வம்சத்தவன்

அன்வஹம் - ஒவ்வொரு நாளும்

அன்வி - பின்செல்ல, பின்தொடர

அன்வேஷணம் - தேடுதல், ஆராய்தல்

அப் - தண்ணீர்

அபக்வ - பக்குவமாகாத

அபசாரஃ - புறப்படுதல், (மரணம்) தேவை இல்லாமை, தவறிழைத்தல், குற்றம்

அபத்யம் - குழந்தை, வழித்தோன்றல், புத்திரன்

அபர - இணையற்ற, மற்றொரு, கழிந்த, சென்ற

அபரத்ர - வேறு இடத்தில்

அபராஜித - ஜயிக்கமுடியாத

அபராதஃ[4] - குற்றம், பாவம்

அபரேத்[3]யுஃ - மறுநாள்

அபரோக்ஷ - புலன்களுக்குத் தெரிகின்ற, நேர்முகமான, அருகிலுள்ள

அபர்ண - இலையில்லாத

அபர்ணா - பார்வதி - துர்கை

அபவனம் - நகரத்தின் அருகிலுள்ள தோட்டம் சோலை பூங்கா

அபவர்க[3]ஃ - முடிவு, அபவாதம், மோக்ஷம், உதவி

அபஹ்னுதிஃ - உண்மையை மறைத்தல், ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் ஓர் அணி

அபாத்ரம் - உபயோகமில்லாத ஓர் பாத்திரம், தானம் பெற தகுதியற்றவன், தகுதி இல்லாத மனிதன்

அபார - கரையில்லாத, எல்லையற்ற, கடக்க முடியாத, மிக அதிகமான

அபாவ்ருத - திறந்த தடையில்லாத

அபி - அருகில் (கூட) மேல்வைத்து, ஒன்றை நோக்கி, எடுத்துச் செல்ல, மேலும் சொற்களின் பொருளை பலப்படுத்த உபயோகிக்கப்படும்

அபூபஃ - அப்பம், வடை

அபூர்வ - முற்றிலும், புதிய, விநோதமான, அஸாதாரணமான, ஒப்பற்ற

இந்த மாதப் ப்ரபலம்

பெயர் : ஸ்ரீ உ.வே.S.B. நாராயண பட்டாச்சாரியார்
தகப்பனார் பெயர் : சேங்காலிபுரம் ஸ்ரீ உ.வே. பாலகிருஷ்ண பட்டாச்சார்
தாயார் பெயர் : ஸ்ரீமதி. பங்கஜலட்சுமி அம்மாள்



பிறந்தநாள் : குரோதன வருஷம் ஆவணி மாதம் மூல நக்ஷத்ரம் (1925)
படிப்பு : 7வது வயதில் உபநயனம் அனதும், கீழ்க்கண்ட ஆசார்யர்களிடம் பயின்றார்.
வேதஸம்ஹிதை - ஸ்ரீ. ஸுப்பராம தீக்ஷிதர் (அனந்தராம தீக்ஷிதரின் தமையனார்) காவ்ய ஸாஸ்த்ரம் - ஸ்ரீ புண்டரீகாக்ஷதீக்ஷிதர்.
ஸ்ரீவைகானஸ பகவத் ஸாஸ்த்ரம் - மற்றும் கல்பஸூத்ர ப்ரயோகம் குட வாசல் அடுத்த அகர ஓகை ஸ்ரீ.உ.வே. ரகுபதி பட்டாச்சார்.

பெற்றுள்ள விருதுகள்: 21 வயதில் முழுபாண்டித்யமும் பெற்று பலஸம்ப் ரோஷணங்களில் அற்வயித்துள்ளார் 27 வயதில் காஞ்சிகாமகோடி பீடாதிபதியால் ஜலம் எனும் ஸ்ரீராமஸமுத்ரத்தில் ஸ்ரீவைகாநஸ ஆகம சக்ரவர்த்தி எனும் விருதுபெற்றவர். வழுத்தூரில் ஸ்ரீ-ஸ்ரீநிவாஸ தீக்ஷிதரால், ''ஸ்ரீவைகானஸ மானஸ ஸரோருஹ ஹம்ஸம்'', ''கனகாயமான கண்டீரவம்'', அலங்கார கலாதிலகம்'' முதலிய பல பட்டங்களையும் பெற்றவர்.

தமிழக அரசு திருவல்லிக்கேணியில் நடத்திய குறுகியகாலப் பாடசாலை ஆசார்யனாக ஏள்ளி 30 மாணவர்களுக்கு அழகுற ஆராதனம் சொல்லிக் கொடுத்து ''ஸ்ரீவைகானஸ ஆகமஸாஸ்த்ர விஜ்ஞான ப்ரவீண'' எனும் பட்டத்தையும் பெரியமுறை ஸ்ரீ உ.வே. வேங்கடகிருஷ்ண பட்டாச்சார் முன்னிலையில் பெற்றவர்.

தலைமையேற்று நடத்திய ஸம்ப்ரோக்ஷணங்கள்: மலேஷியா கிளாங்க் ஸ்ரீஸௌந்தர ராஜப் பெருமாள் ஸன்னிதி, திருப்பதி, ஒப்பிலியப்பன் கோவில் திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை, நாதன்கோவில் மற்றும் சென்னையில் ஆழ்வார் திருநகர், புரசைவாக்கம், சின்மயாநகர், ஆகிய இடங்களில் தலைமையேற்று ஸம்ப்ரோஷணத்தை நடத்தியுள்ளார்.

திருக்கண்ணபுரம், நங்கநல்லூர், தி. நகர் முதலான இடங்களில் ஆஸ்தான வித்வானாக ஆண்டுதோறும் உத்ஸவங்களை சிறப்பாக நடத்தி வருகிறார். ஹரிதவாரமங்கலம் ஸ்ரீ உ.வே. S.D.ராஜம் பட்டாச்சாரியார் ஸ்வாமியும் இவரும் சேர்ந்தே அன்வயிப்பர். கோனேரிராஜபுரம காலஞ்சென்ற ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸ பட்டாச்சார் ஸ்வாமியும் இவர்களும் சேர்ந்தே பல ஸம்ப்ரோக்ஷணங்கள் நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தர்மபத்னீ : ஸ்ரீலக்ஷ்மீ அம்மங்கார் மற்றும் நான்கு குமாரர்களும் இரண்டு பெண்களும் உள்ளனர்.

சிஷ்யர்கள் : இவரது சிஷ்யர்களான அம்மங்குடி ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ பட்டாச்சார் கீழையூர், ஸ்ரீ. ஸௌமிய நாராயண பட்டாச்சார் இருவரும் ப்ரதிஷ்டாதிகாரிகளாக விளங்குகிறார்கள். தற்போது உப்பிலியன் கோவில் சிர. ஸ்ரீகாந்தனுக்கும், சேங்காலிபுரம் சிர. வெங்கடேசனுக்கும் நம் ஸாஸ்த்ரதை போதித்து வருகிறார்.

முகவரி: 206, அகஸ்த்யர் தெரு, ஆழ்வார் திருநகர், சென்னை - 600 087. போன்: 044-4866251

வாசகர் கடிதம்

நம் பத்திரிக்கையில் வரும் கருத்து ஒவ்வொன்றும் தித்திக்கும் கற்கண்டு.மேலும் கோயில் ஸ்தல புராணம், குறுக்கெழுத்துப் போட்டி, தையல் கலை படிக்க படிக்க ஆர்வம் தான். உங்கள் பணி மேலும் வளர்ச்சியடைய ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ A.S. பார்த்தஸாரதி பட்டாச்சார், ஆயலூர்

நம் பத்திரிக்கையின் இரண்டாம் ஆண்டு துவக்க விழாவில் பங்கு கொள்ளும் பாக்கியம் பெற்றேன். நமது மூத்த வைகாநஸ மகான்களின் ஆசியுரையை மெய்மறந்து கேட்டேன். அவர்கள் கூறிய கருத்துக்கள் நமது இளைய தலைமுறையினருக்கு ஒரு விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தும் என்றால் அது மிகையாகாது. மேலும் பட்டிமன்றத்தில் நடுவரின் தீர்ப்பு வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போல் தொடர்ந்து அர்ச்சகர்கள் அர்ச்சகர்களாகவே நீடிக்க பெண்களின் ஆதரவு கண்டிப்பாக தேவை என்பதை வலியுறுத்தினார். இதுபோன்ற நிகழ்ச்சிகளை அடிக்கடி ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீ. சுகுமாரபட்டர், மடிப்பாக்கம், சென்னை - 91.

நம் பத்திரிக்கையை படித்தேன். மனதிற்கு தெளிவாகவும் புரியும்படியாகவும் உள்ளது. இந்த இதழ் எங்களை போன்ற குலஸ்வாமிகளுக்கு பல சந்தேக நிவர்த்திச் செய்கிறது.

ஸ்ரீ V. வெங்கடக்ருஷ்ண பட்டாச்சார், தாந்தோன்றிமலை, தாங்கள் நடத்திவரும் இம்மாத இதழ் நமக்கெல்லாம் ஒரு மனிதனுக்கு சிரசை போன்றதாயுள்ளது. பலகாலம் சிறப்பாக நடக்க பகவானை ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ R. செல்லப்பா பட்டாச்சார், ராணிப்பேட்டை.

ஸ்ரீவைகாநஸத்தில் நவரத்தினங்களை அடியேன் காண்கிறேன். நவரத்தினங்கள், 1. ஸ்ரீவைகாநஸ கல்பசூத்ரம், 2. திவ்ய தேசங்கள் 3. ஸ்ரீ புருஷஸூக்த வ்யாக்யானம் 4. மணிஓசை 5. வடமொழி அகராதி 6. இந்த மாதப்ரபலம் 7. சிறுவர் பகுதி 8. கேள்வி - பதில், 9. த்வாதசமாஸார்சனம் ஸ்ரீ Dr. S. முத்து பட்டரின் கல்ப சூத்ர கட்டுரை அடியேனுடைய M. Phil ஆராய்ச்சிக்கு மிகவும் உறுதுணையாகயிருந்தது.

ஸ்ரீ S. சந்தான கோபாலபட்டாச்சார், சென்னை - 34

தையற்கலை-3

செல்வி D. கல்யாணி, M.A.,B.Ed., தையல் கலை ஆசிரியை, மேற்கு மாம்பலம்

அன்ட்ராயர்

அளவு எடுக்கும் விதம்:

0 to 1 = உயரம் + 2
0 to 4 = இடுப்புச் சுற்றளவு + 8/4
3 to 4 = சீட்
0 to 3 = ¼ இடுப்புச் சுற்றளவு + சீட்
3 to 5 = 1
3 to 6 = சீட் இறக்கம் + 1
2 to 7
1 to 8 = ½ இன்ச்

மாதிரி அளவு படம்



மாதிரி அளவு

உயரம் = 9 + 2 = 11
இடுப்புச் சுற்றளவு = 22 + 8
= 30/4 = 7½ +
சீட் -7½ + 1½ = 9
சீட் = 1½
சீட் இறக்கம் 6½ + 1 = 7½

அளவு எடுத்து வெட்டும் முறை:

உயரத்துடன் இரண்டு கூட்ட வேண்டும். இடுப்பு சுற்றளவுடன் எட்டு கூட்டி நான்கால் வகுத்த பின்னர் அதனுடன் சீட் 1½ இன்ச் கூட்ட வேண்டும், துணியில் எடுக்கும் போது இரண்டு உயரம் (11 + 11 = 22) எடுக்க வேண்டும். இரண்டு இடுப்பு சுற்றளவு எடுக்க வேண்டும். (9 + 9 = 18) துணியில் கோடு போட்டு வெட்ட வேண்டும். பின்னர் துணியை நான்காக மடிக்க வேண்டும். இடது புறம் மடிப்பு இருக்க வேண்டும். இப்பொழுது அளந்தால் உயரம் 11 இன்சும் இடுப்புச் சுற்றளவு 9 இன்ச் ஆக இருக்கும், பட்டிக்காக 3 to 5 = 1 இன்ச் மார்க் செய்து கோடு போடவும். 3 to 4 = 1½ இன்ச் மார்க் செய்ய வேண்டும். 4 to 6 சீட்டு இறக்கம் 6½ +1 = 7½ மார்க்கு செய்ய வேண்டும். 7 to 2 = ½ இன்ச், 1 to 8 = ½ இன்ச் மார்க் செய்ய வேண்டும். நெம்பர் 4 லிருந்து 6 வரை கிராஸ் கோடு போடவேண்டும். அதை போன்று 6 to 7; 7 to 8 க்ராஸ்சாக வரைந்து 8 to 7; 7 to 6, 6 to 4 மூன்று க்ராஸ்கோடுகளை வெட்டவும்.

தைக்கும் முறை:

வெட்டி பின்னர் ட்ராயர் பிரித்தால் இரண்டு கால்கள் தனித்தனியாக வரும் இரண்டு கால்களிலும் 7 to 6 வரை சைடு க்ராஸ் தனித்தனியாக சேர்த்து தைக்க வேண்டும். இரண்டு கால்களிலும் 7 to 8 கால் கிழ்ப்புறம் ½ இன்சுக்கு இரண்டுமுறை மடித்து தைக்க வேண்டும், வலதுக்காலில் இருந்து ஒரு துண்டை இடது காலில் இருந்து ஒன்றும் எடுத்து பின்புறத்தில் இருந்து முன்புறம் வரை சேர்த்து தைக்க வேண்டும். மேல் புறத்தில் பட்டிக்காக கோடு போட்டு உள்ள 1 இன்ச் மடித்து தைக்கும் பொழுது நாடா அல்லது எலாஸ்டிக் கோர்ப்பதற்காக சிறிது இடைவெளி விட்டு தைத்து முடிக்க வேண்டும். (தொடரும்)

சிறுவர் பகுதி

உன்னை நீ அறிவாய்! -3

By தேனீ

(தாத்தாவும் பேரனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். என்னவென்று நாமும் கவனித்து கேட்கலாமா)

தாத்தா : ஸ்ரீவத்ஸா! பஞ்சாங்கத்தை எடுத்துக்கொண்டு வா என இரண்டு மூன்று தடவை சொன்னேன். நீ பூஜையறையையே பார்த்துக்கொண்டே இருக்கிறாய்! என்ன கவனம் அங்கே!

பேரன் : இதோ கொண்டு வறேன் தாத்தா - பஞ்சாங்கம் இங்குதான் இருக்கிறது. தாத்தா. பூஜை யறையில் உள்ள குத்துவிளக்கில் 5 திரி போட்டு விளக்கு எரிகிறது. ஏன் தாதத்தா 5 திரி முகம் வேண்டும் மூன்று, நான்கு, 6 அல்து 7 திரிபோட்டு விளக்கு இருக்கக்கூடாது?

தாத்தா : நம்மிடையே ஐந்து என்ற எண் மிகவும் புனிதமானது. பூஜை, வாழ்க்கை, யாவற்றிலும் 5 என்ற எண்ணிக்கையுள்ள பொருட்கள், விஷயங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. குத்துவிளக்கில் 5 முகம் மிகவும் உத்தமமானது புனிதமானது.

பேரன் : பஞ்சாங்கம் இதோ. வாங்கிக் கொள்ளுங்கள். ஆமாம் இதில் என்னப் பார்க்கிறீர்கள்?

தாத்தா : பஞ்சாங்கம் என்பது இந்து காலண்டர் தான். அதில் திதி, வாரம் (கிழமை), நட்சத்திரம், யோகம், கரணம் என 5 விஷயங்களை பார்த்து கணக்கிட்டு சுபவேளையில் சுபகாரியங்களை செய்ய உதவுகிறது பஞ்சாங்கம். சந்திரனின் தேய்தல் மற்றும் வளர்ச்சியைப் பொறுத்து பௌர்ணமி முதல் அமாவாஸ்யை பிறகு வளர்ந்து பௌர்ணமியில் முடிகிறது. இதையே தேய்பிறை அதாவது கிருஷ்ணபக்ஷத்தில் 15 திதி (தினங்கள்)களும், வளர்பிறையில் அதாவது சுக்ல பக்ஷத்தில் 15 திதிகளும் இருக்கின்றன. அமாவாசை, பௌர்ணமி 15 ஆவது தினம் வருகிறது. அமாவாசை (அ) பௌர்ணமிக்கு அடுத்துவரும் 14 நாட்கள் முதல் நாள் பிரதமை என்றும் அடுத்துவரும் நாட்களை, த்விதீயை, த்ருதீயை, சதுர்த்தி, பஞ்சமி, ஷஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, த்வாதசி, த்ரயோதசி, சதுர்தசி என சொல்கிறார்கள்.

பேரன் : நீங்க ஏகாதசி விரதம் இருக்கிறீர்களே. அது அமாவாஸ்யை (அல்லது) பௌர்ணமிக்குப்பின் 11 ஆவது நாளா!

தாத்தா : ஆமாம், ப்ரதமை, த்விதீயை, என்பதெல்லாம் சம்ஸ்கிருதத்தில் ஒன்று இரண்டு என எண்களைச் சொல்வதுதான். இப்ப உனக்குக் கூட சம்ஸ்கிருதத்தில் ஒன்று முதல் 14 வரை எண்ணிக்கை தெரிந்துவிட்டதல்லவா மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக்கொள்.

பேரன் : சம்ஸ்கிருதத்தை சுலபமா கற்றுக்கொள்ள முடியுமா தாத்தா?

தாத்தா : முடியுமே! நம்ம பண்டிகைகள், விழாக்கள், சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் கவனித்துப்பார்த்தால், சம்ஸ்கிருதமும் புரியும். செயகின்ற காரியங்களுடன் ஏன், எப்படி என்பது புரியும். பொறுமையாக உன்னித்து கவனிக்கவேண்டும்.

பேரன் : ஸ்ரீராம நவமி, கோகுலாஷ்டமி, என ராமர் பிறந்தநாளை, கிருஷ்ண ஜயந்தியை சொல்லுகிறோமே அதுவும் அப்படித்தானா?

தாத்தா : ஆமாம். ஆவணிமாதம் க்ருஷ்ணபக்ஷத்தில் எட்டாவது நாளை ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி என கோகுலாஷ்டமி கொண்டாடுகிறோம். அதேபோல்

சைதர மாதம சுகல பக்ஷத்தில் ஒன்பதாவதுநாள் அதாவது ஸ்ரீராம நவமியை கொண்டாடுகிறோம்.

இன்னொரு வேடிக்கை தெரியுமா? நம் பிறந்தநாளை பிறந்த நக்ஷத்திரத்தை யொட்டி கொண்டாடுகிறோம். மறைந்த தினத்தில் பித்ருக்களுக்கு திதியை ஒட்டி கொண்டாடுகிறோம். பெருமாள், நக்ஷத்திரம் திதி எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவனல்லவா? ராம, கிருஷ்ண ஜயந்திகளை திதியை ஒட்டி நவமியிலும் அஷ்டமியிலும் கொண்டாடுகிறோம்.

பேரன் : பஞ்சமியை ஐந்தாவது திதி என சொன்னீர்கள். அதேபோல கோவிலில் அனைத்துப்பண்டிகைகள் எல்லாவற்றிலும் 5 என்ற எண்ணிக்கை முக்கியமுடையது என்கிறீர்களே அது எப்படி தாத்தா?

தாத்தா : சொல்கிறேன். அதற்கு முன் உனக்குத் தெரிந்த 5 எண்ணிக்கையுடைய பொருட்கள் தொகுப்பு சொல்லு பார்ப்போம். பஞ்ச என்ற அடைமொழியுடன் ஆரம்பிக்கும் என க்ளூ Clue கொடுக்கிறேன்.

பேரன் : (சற்றுயோசித்துவிட்டு) பஞ்சாமிர்தம் ..ம்ம்.. பஞ்ச பாண்டவர்கள் - தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், ஸஹாதேவன் பஞ்சகவ்யம் - பூணூல் போடும் போது கொடுத்தார்களே (பசும்பால், தயிர், நெய், கோமியம், கோமூத்ரம்) பெருமாளுடைய பர, வியூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை என பஞ்சரூபங்களை சொன்னீர்களே! சரிதானா?... ஐம்புலன்கள் என கண், காது, மூக்கு, வாய், மெய் பள்ளியிலே சொன்னார்கள். அதுக்கு என்ன பெயர் சொல்லவேண்டும் தாத்தா?

தாத்தா : அதைத்தான் பஞ்சேந்திரியங்கள் என சொல்கிறோம். பரவாயில்லையே. நான் சொன்னதையெல்லாம் மறக்காமல் சொல்கிறாயே. கெட்டிக்காரன் நீ... பூமி, தீர்த்தம், நெருப்பு, காற்று, ஆகாசம் இவற்றை பஞ்ச பூதங்கள் என்று சொல்கிறோம். பஞ்ச வாயுக்கள் என்ன தெரியுமா. சாதம் பரிஷேசனம் செய்து சாதத்தை சாப்பிடும்போது ப்ராணாய ஸ்வாஹா அபானாயஸ்வஹா... எனச் சொல்கிறோம். அவையே ப்ராண, அபான, வ்யான, உதான, ஸமான என்னும் பஞ்ச வாயுக்கள்.

பேரன் : பெருமாளுடைய ஆயுதங்கள் சங்கு, சக்கரம், கதை, வில், கத்தி என்று அதை பஞ்சாயுதங்கள் என தானே சொல்லணும். பஞ்சாயுத ஸ்தோத்ரத்தை விஷ்ணு சஹஸ்ரநாமத்தோடு சொல்வீர்களே. தாத்தா.

தாத்தா : ஆமாம் ஆமாம். அந்த ஸ்லோகம் நீ கூட கற்றுக்கொண்டாயல்லவா! அதேபோல பெரியவாளுடைய ஆபரணங்களில் முக்கியமான பஞ்சாங்க ஆபரணங்கள் கடகம், உபவீதம், குண்டலம், அங்குலீயகம், க்ரைவாலங்கரணம் (அரைநாண் கயிறு, பூணூல், கடுக்கண்,மோதிரம், செயின்) என்பன.

பேரன் : ஆத்திலும், கோயிலிலும் பெருமாளுக்கு முன்புறம் 5 வட்டில் வைத்து தீர்த்தம் சேர்த்திருக்கிறார்களே தாத்தா.

தாத்தா : மிகவும் முக்கியமான விஷயத்தை கவனிச்சிருக்கே! அவைதான் பஞ்சபாத்திரம் திருவாராதனத்தில் அவஸ்யம் இருக்கவேண்டியது. மத்தியில் உள்ள வட்டிலில் உள்ள சுத்தோதகம் நல்ல தீர்த்தம் என்பது. அதைச்சுற்றி அக்னி மூலை அதாவது தென் கிழக்கில் ஸ்நாந தீர்த்தம் என பெருமாள் ஸ்நாந உபசார தீர்த்தம் கொண்டது. நிர்ருதி மூலை அதாவது தென்மேற்கில் அர்க்யம் (பெருமாள் கை அலம்ப) உபசாரம் செய்ய உள்ளது. அடுத்து வாயு மூலை என்கிற வடமேற்கில் பாத்ய தீர்த்தம் (பெருமாள் காலலம்ப) வைக்கவேண்டும். ஈசான்ய மூலைங்கிற வடகிழக்கில் ஆசமன (பெருமாள் ஜலமருந்தும்) உபசாரத்திற்காக தீர்த்தம் வைக்கிறோம். பெருமாள் எந்த திசையைப் பார்த்தாலும் பஞ்சவட்டில் வைக்கும் திசை மட்டும் மாறாது. எனக்கு கொஞ்சம் காரியம் இருக்கு இன்னொருநாள் பார்க்கலாமா!

பேரன் : சரி தாத்தா. எனக்கூற இருவரும் கலைகிறார்கள். **(தொடரும்)**

கேள்வி பதில்

கேள்விகள்: ஸ்ரீ உவே. S.B. நாராயண பட்டாச்சார், வடகுடி.

பதில்கள் : ஸ்ரீ உவே A.T. திருவேங்கட பட்டாச்சார், அரக்கோணம்.

கேள்வி: பூர்ணாஹுதிஹோமம் நம் ஸாஸ்திரத்தில் சொல்லி யுள்ளதா?

பதில்: பூர்ணாஹுதி ஹோமம் தனியாக எதுவும் சொல்லப்படவில்லை. கிருஹ்ய ஸூத்ரத்தில் ''அந்த ஹோமம்'' செய்யும்போது முடிவில் ''ஸப்ததே அக்னே - ருதுதான'' இதி பூர்ணாஹுதி என்று 2 ஆஹுதிகள் ஹோமம் செய்யச் சொல்லப்பட்டுள்ளது.

கேள்வி: வஸோர்தாரா ஹோமம் பற்றி?

பதில்: இதுபற்றியும் மரீசி விமாநார்சன கல்பத்தில் ஏதும் சொல்லப் படவில்லை. தெலுங்கு ப்ரதிஷ்டா அனுக்ரமணிகாவில் (திரு வெங்கடந்ருஸிம்ஹாசார்யா நல்லூறு) வஸோத்தாரா ஹோமம் சொல்லப்பட்டுள்ளது. உக்த ஹோமங்கள் முடிந்த பிறகு ஸப்யாக்னியில் நெய் ஸ்ருவத்தில் தார்யமாக விஷ்ணு ஸூக்தம் புருஷ ஸூக்தம், ஸ்ரீஸூஸூக்தம் அதோதேவாதி (6) ஏகாக்ஷர ஸூக்தம், விஷ்ணு காயத்ரீ இவைகளை 4 முறை சொல்லி ஹோமம் செய்யவும். அல்லது ஒருமுறையாவது சொல்லி செய்யவும் என்று கூறப்பட்டுள்ளது.

மற்றொரு ப்ரதிஷ்டா அனுக்ரமணிகாவில் (கையெழுத்துப் பிரதியில்)

வஸோத்தாரா ஹவணியில் ஸவிதாரம் என்று (சூர்யனை) ஆவாஹனம் செய்து அர்ச்சிக்கவும்.

''ஆரம்பாத்யவஸான பர்யந்தம் ஆகாரத்யுபரிஷ்டாந்தம் த்ரவ்ய மந்த்ர க்ரியா ஹீன ஸர்வ தோஷ ஸாந்தயர்த்தம்.... குண்டே வஸோத்தாரா ஹோமம் கரிஷ்யே'' என்று ஸங்கல்பித்துக் கொண்டு ஹோமம் செய்யவும். ஹோமம் செய்ய வேண்டிய ஸூக்தங்கள் மேலே கூறப்பட்டுள்ளன.

கேள்வி: அக்னியில் என்ன என்ன த்ரவியங்கள் சேர்க்க சாஸ்திரம் அனுமதிக்கிறது?

பதில்: மரீசி விமாநார்சன கல்பம் 29 வது படலத்திலுள்ளபடி கீழ்க்கண்டவைகளை அக்னியில் சேர்க்கலாம்.

1. பாலாசம், (புரசு) அரசு, வன்னி, கருங்காலி, ஆல், அத்தி முதலிய சமித்துக்கள். 2. நெய், பால், தயிர். 3. யவதானியம் (பார்லி) பயறு, உளுந்து, தினை, கோதுமை, வெண்கடுகு, எள். கடலை முதலிய தானியங்களுடன் நெல் அரிசி முதலியனவும்.

மரீசி விமாநார்சன கல்பம் 32 வது படலத்திலுள்ளபடி

4, பக்வ மன்னம், தாமரைப்பூ, பில்வம் இலை (நெய்யில் தோய்த்து), 5. தயிர், பால், நெய், பொரி கலந்த கலவை முதலியவற்றையும் அக்னியில் சேர்க்கலாம். இவற்றிற்கான ஹோம மந்திரங்களையும் மரீசி கூறியிருக்கிறார்.

மரீசி விமாநார்சன கல்பம் 75 வது படலத்திலுள்ளபடி அக்னியின் ஹிரண்யா என்ற நாக்கில் (ஈசான மூலையில்) சமித்துக்களையும், கனகா என்ற நாவில் (கிழக்கில்) நெய்யும், ரக்தா என்ற நாவில் (அக்னி மூலையில்) யவதானியமும் க்ருஷ்ணா என்ற நாவில் (நிருதி மூலையில்) பொரியும், வஸுப்ரபா என்ற நாவில் (மேற்கில்) மாவும், அதிரக்தா என்ற நாவில் (வாயு மூலையில்) எள்ளும், (தெற்குக்கும் வடக்குக்கும் இடையே) மத்தியில் பஹுரூபா என்ற நாவில் சருவும் (பக்வமன்னம்), மற்ற ஹோம திரவியங்களை குண்டத்தின் நடுவில் ஜொலிக்கும் அக்னியில் சேர்க்கவும். இதே கிரமத்தில் பில்வம், பாலாசம், ஆல், அரசு, அத்தி, வன்னி, கருங்காலி என்ற 7 வகை சமித்துக்களையும் ஹோமம் செய்யவும். இதைத்தான் ஸப்த த்ரவ்ய ஹோமம் ஸப்த ஸமித் ஹோமம் என்று கூறுகிறோம்

செய்தி

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூரில் 10.2.2000 வியாழக்கிழமை அன்று ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா ஸம்ப்ரோக்ஷணம் வெகுவிமர்சையாக நடைபெற்றது. வடபத்ரசாயி சன்னதியில் திருநெல்வேலி **ஸ்ரீ உ.வே. V.S. கோபால பட்டாச்சார்** ஸர்வ ஸாதகமாக அன்வயித்தார். ப்ரதானாச்சார்யராக **ஸ்ரீ உ.வே. S. லக்ஷ்மண (ராஜு) பட்டாச்சார்** அன்வயித்தார். ஸ்ரீ ஆண்டாள் ஸன்னிதியில் சிறுமயங்குடி **ஸ்ரீ உ.வே. சென்னகேசவ பட்டாச்சார்** ஸர்வஸாதகமாக அன்வயித்தார் ப்ரதானாச்சார்யராக **ஸ்ரீ உ.வே. V கோவிந்த பட்டாச்சார்** அன்வயித்தார். நூற்றிற்கும் அதிகமான நமது குலஸ்வாமிகளும் இந்த ஸம்ப்ரோக்ஷணத்தில் அன்வயித்தது குறிப்பிடத்தக்கது. யாகசாலைகளில் 69 குண்டங்களில் நம் ஸ்வாமிகள் அன்வயித்தார்கள். திருப்பணி கமிட்டியில் **ஸ்ரீ V. முத்துபட்டர்** உறுப்பினராகயிருந்து அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

தகவல்: **ஸ்ரீ S. ரகுராம பட்டாச்சார்**, ஸ்ரீவில்லிப்புத்தூர்

குறிமேடை

(குறி சொல்பவர் மேடை மீது கண்ணை மூடிக்கொண்டு த்யானத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் அவரது சிஷ்யன் குருவே பலர் தங்களிடம் குறிகேட்ட வெளியில் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறுகிறான். உடனே அனைவரையும் உள்ளே வரச் சொல் என்கிறார், கண்களை திறக்காமல். அனைவரும் வந்து குறி சொல்பவர் எதிரே அமர்கிறார்கள். உடனே சிஷ்யன் நீங்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக உங்கள் குறையை சொல்லுங்கள் என்கிறான்.

ஒருதாய் என் மகளுக்கு நீண்ட நாட்கள் ஆகியும் வரன் குதிரவில்லை என்ன செய்வது இதற்கு ஒரு வழி சொல்லுங்கள்? என்கிறார்.

ஒரு சிறுவன்:- என் ஆசாரியன் விகனஸர் பற்றி எனக்கு விபரமாக சொல்லித் தருவது யார்? என்கிறான்

ஒரு இல்லத்தரசி:- ஓய்வு நேரத்தில் என் மாத பட்ஜெட்டில் இடிக்காமல் தையல் பயில இயலுமா? என்கிறார்.

ஒரு வயதான மூதாட்டி:- என்னால் முன்பு போல் வெளியில் எங்கு செல்ல முடியவில்லை வயதாகிவிட்டது. பல திவ்ய ஸ்தலங்களை பற்றி இங்கிருந்தே நான் அறிந்து கொள்ள இயலுமா? என்கிறார்.

ஒரு இளைஞன்:- வேத மந்திரமான புருஷ சூக்தத்தின் அர்த்தம் எனக்கு யார் சொல்லித் தருவார்கள் மேலும் பெருமாள் கோவிலுக்கு தினமும் போகிறேன் எந்த மாதத்தில் என்ன மாதிரியாக உத்ஸவங்கள் செய்யவேண்டும்? என்கிறான்.

பெரியவர் ஒருவர்: வைகாநஸ க்ருஹ்ய சூத்திரத்தில் 18 ஸம்ஸ்காரங்கள் உள்ளன. இந்த ஸம்ஸ்காரங்கள் எதற்காக நாம் செய்ய வேண்டும் என்று விகநஸர் அருளியுள்ளாராம்? அதை பற்றி எனக்கு விரிவாக யார் சொல்லித்தருவார்கள்? என்கிறார்.

குறிசொல்பவர் த்யானத்திலிருந்து விடுபட்டு உங்கள் அனைவரின் ப்ரச்னைகளுக்கும் ஒரே தீர்வு AKS டிரஸ்டின் ''ஸ்ரீவைகாநஸம்'' மாதப் பத்திரிகையை படிப்பது மட்டும் தான் என கூறி விடை பெறுகிறார்.

ஸ்ரீமதி.ரகுமகள், பாளையங்கோட்டை.

அறிவிப்பு

திருப்பதி S.V.D.S.V. ஸபையினர் ''ஸ்ரீவைகானஸம்'' எனும் பெயரில் தொடர் புத்தகங்கள் வெளியிட்டுள்ளனர். மூன்றாவது மலரில் கல்பஸூத்ரங்கள் பற்றியும் நான்காவது மலரில் ஸ்ரீபகவத் ஆராதன கைங்கர்ய விவரம் பற்றியும் ஐந்தாவது மலரில் நாம் கடைபிடிக்க வேண்டிய ஆசாரங்கள் பற்றியும் மிகவும் விஸ்தாரமாக தெளிவாக கட்டுரைகளையும் மதுராந்தகம் ஸ்ரீ உ.வே. S. ரகுவீர பட்டாச்சார் ஸ்வாமி தொகுத்து வழங்கியுள்ளார். மற்றும் ஸ்ரீவைகாநஸ ஞான வேள்வி ஆஹ்வானிகளை தொகுத்து ஒரு சிறப்பு மலரை வெளியிட்டுள்ளார். அதில் ஸ்ரீவைகானஸ திவ்ய தேசங்கள் மற்றும் பல அரிய விஷயங்களும் அடங்கியுள்ளன.

மேற்கண்ட நான்கு புத்தகங்களும் தலா ரூ.2/- விலையில் கிடைக்கும். ஒவ்வொரு புத்தகத்திற்கும் தனித்தபால் செலவு ரூ.2/- மொத்தமாக தபால் செலவு ரூ.4/- ஆக 4 புத்தகமும் வேண்டுவோர் ரூ.12/- M.O. செய்யவும். முகவரி: ஸ்ரீ உ.வே.S. ரகுவீரபட்டாச்சார், 130, தேரடித்தெரு, மதுராந்தகம் - 603 306.

குறுக்கெழுத்துப் பரிசுப் போட்டி2க்கானவிடை

1 தி	வ்	3 ய	தே	6 ச	ங்	க	ள்	
ரு		2 சோ	ளி	ங்	8 க	பு	9 ர	ம்
வே		தை		7 கு	டி	ல்	ம்	ப
ங்	20 அ	த்	21 தி	ங்	10 க	ள்	ப	ட
4 க	ன்	னி	னி	கு	ர	11 கை	ம்	கை
ட	ன		ன்	ம	ம்	ங்	12 ம்	து
ம்	ம்	ன	19 ஸ	14 சா	ளா	க	ங்	13 ம
	ம்	த	த்	15 ர	டு	ர்	கை	ட
18 க்	ர	ந்	த	ம்	17 வ	16 ய		ம்

சென்ற மாத இதழில் வெளியான குறுக்கெழுத்துப் போட்டி-1க்கான விடைகளை பலர் சரியாக எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.100/- பரிசு பெறும் அதிருஷ்டசாலி ஸ்ரீஉவே K. பாலாஜி பட்டாச்சார், சிதம்பரம்.

குறுக்கெழுத்துப் பரிசுப் போட்டி - 3



பெயர் : _____ சந்தா எண்: AKS

முகவரி : _____

_____

_____

பின்கோடு _____

இடமிருந்து வலம்

1. நமது ஆகமத்தை இப்படித்தான் அழைக்கவேண்டும் (9)
2. கட்டுரைகளின் முடிவில் போடும் வார்த்தை (3)
3. கருடனின் விரோதி (3)
4. வரப்போகும் தமிழ் வருடம் (4)
5. ராஜாவின் சட்டசபை (த'வில் தொடங்கும்) (4)
6. ப்ருகு மஹர்ஷியின் படைப்புகளில் ஒன்று (6)

வலமிருந்து இடம்

7. மாயை செய்யும் மந்திரவாதி (3)
8. ஒரு தாந்யம் (3)

மேலிருந்து கீழ்

1. கிருஷ்ணர் ஸம்ஹரித்த கொக்கு வடிவான அஸுரன் (5)
9. Dr. S. முத்துபட்டரின் கட்டுரைத்தலைப்பின் ஒரு பகுதி (7)
10. காடு (3)
11. கொடியேற்றுதல் (7)
12. நேபாளத்தில் ஸுலபமாக கிடைக்கும் பெருமாள் (6)
13. திருவேங்கடம், ஸ்ரீமுஷ்ணம் போன்றவை இந்த விதமான க்ஷேத்ரங்கள். (9)
14. மூலவர் (6)
15. இதைக் கட்டிக் கொண்ட அர்ச்சகர் ஊரெல்லையைத்தாண்ட முடியாது (7)
16. ஆவணி அவிட்டம் (5)

கீழிருந்து மேல்

6. வீட்டில் துளஸிச் செடியை இதில் வைத்து பூஜிப்பர். (3)
16. எட்டாவது ஸம்ஸ்காரம் (6)
17. திசையைக் காக்கின்ற தேவர் (6)

மேற்கண்ட குறுக்கெழுத்து கட்டத்தைப் பூர்த்தி செய்து வரும் 25ந் தேதிக்குள் எங்களுக்கு வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.சந்தா எண்ணை கண்டிப்பாக குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.இந்த போட்டியில் சந்தாதாரர்கள் மட்டுமே கலந்து கொள்ள தகுதியானவர்கள். ஒருவருக்கு மேற்பட்டவர்கள் சரியானவிடையை அனுப்பியிருந்தால்குலுக்கல் முறையில் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்வு செய்யப்படுவார். வெற்றி பெற்றவருக்கு ரூ.100/- பரிசாக வழங்கப்படும் ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

வருட சந்தா ரூ.60/- இரண்டு வருட சந்தா ரூ.110/-
ஆயுள் (நிரந்தர) சந்தா ரூ.1001/-

A.K.S. பெயரில் D.D. அல்லது மனியார்டர் மூலமாக உங்கள் சந்தா தொகையை அனுப்பவும். D.D. சென்னையில் மாற்றத் தக்க வகையில் இருக்க வேண்டும்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி
AKS Trust 24, எல்லையம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

சந்தா படிவம்

சந்தா அனுப்புபவரின் பெயர்: .....

முகவரி: .....

.....

.....

Pincode ..... Ph.No.(STDCode) .....

அனுப்பப்படும் தொகை: ரூபாய் 60 / 110 / 1001

வங்கியின் பெயர்.....

டி.டி.எண்./எம்.ஓ. ரசீது எண்.:.....தேதி:.....

த்வாதஶ மாஸார்ச்சனம்

N.S. பார்த்தஸாரதி பட்டாச்சாரியார், ஆசிரியர், ''ஸ்ரீவைகானஸம்''

பால்குன மாஸார்ச்சனம்

பௌர்ணமியன்று உத்தரபல்குனி நக்ஷத்ரம் சேர்வதால் சாந்த்ரமானமாக பால்குனமாஸம் என்றழைக்கப்படும் இந்த பங்குனிமாதத்தில் பெருமாளுக்கு நித்யம் சந்தனம் சாற்ற உபயம் செய்பவர் வருஷ முழுக்க சந்தனம் சாற்றுவதால் ஏற்படும் பலன்களை அடைந்து அனைத்து ஐஸ்வர்யங்களும் அடைவார் என்று மரீசி மஹர்ஷி அருளிச் செய்கிறார்.

பங்குனி உத்தரத்தில் மஹாலக்ஷ்மீ திருப்பாற்கடலிலிருந்து அவதரித்த படியால், அன்றைய தினம் பெருமாளையும் நாச்சியார் களையும் 27 உபசாரங்கள் ஸமர்ப்பித்து அர்ச்சித்து திருமஞ்ஜனம் உத்ஸவம் முதலானதைச் செய்து நிரம்ப தளிகைகள் கண்டருளப் பண்ணவேண்டும் எனவும் மஹர்ஷிகள் அருளியுள்ளனர். ஸ்ரீஅத்ரிமஹர்ஷியும், பெருமாள் தாயாருக்கு, பங்குனி உத்தரத்தன்று உத்ஸவம்ஸநபநம் செய்விப்பவர் இஷ்டமான விருப்பங்களை அடைவதாக அருளியுள்ளார்.

வெள்ளிக்கிழமை - ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு உகந்த நாள் என்கிறோமே? மஹர்ஷிகளின் ப்ரமாணம் ஏதேனும் உண்டா? என்றால், உண்டு.

ஸ்ரீ அத்ரிமஹர்ஷி, ஸமூர்த்தார்ச்சனாதிகரணத்தில் 47-வது அத்யாயத்தில் ஸம்பத்காமீ ஸ்ரியம் பக்த்யா ப்ருகுவாரேஷு சார்ச்சயேத்। என்று ஆரம்பித்து 3 ஸ்லோகங்களில் வெள்ளிக்கிழமையன்று செய்யவேண்டியவற்றை அருள்கிறார். ஸ்திரமான ஐஸ்வர்யத்தை விரும்புபவன். பூமாலை, சந்தனம், துளஸி, குங்குமம், வெத்திலை, பாக்கு, தேங்காய், பழங்கள், பக்ஷணங்கள், பாயஸம் முதலானவற்றை கொண்டு ஸ்ரீமஹாலக்ஷ்மியை பக்தியுடன் வெள்ளிதோறும் அர்ச்சிக்கவேண்டும். இவ்வாறு செய்பவன் வம்ஸவ்ருத்தி, தனதான்ய ஸம்ருத்தியுடன், இவ்வுலகில் ஸர்வஸௌபாக்யங்களையும் அடைந்து ஸுகித்து இறுதியில் வீட்டுப் பேற்றையும் அடைகிறான் என்கிறார் மஹர்ஷி.

Sri: ☎ 8552180

THANJAI MOORTHY

16, NORTH TANK SQUARE STREET, TRIPLICANE, CHENNAI - 5.

எங்களிடம் 108 திவ்யதேசப்பெருமாள் படம், பெருமாள் படம்போட்ட மேக்னட், கீசெயின், பெருமாள் டாலர்கள், யந்த்ரங்கள், நவரத்ன மாலை, துளஸி மாலை, ஸ்படிகமாலை, நல்முத்துமாலை, திருமண் ஸ்டிக்கர், திருமண் பெட்டி, லேமினேஷன் செய்தபெருமாள் படங்கள் முதலானவை சகாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

Edited by N.S. Parthasarathy Battachariar & D. Mohan Battachariar. *Printed at:* Guru Achagam, Triplicane,Chennai-600 005. *Published by:* **A K S Trust**, 24, Ellaiamman Koil Street, West Mambalam, Chennai - 600 033.

செய்தி

நமது AKS Trust ஸ்ரீவைகாநஸம் மாதப்பத்திரிக்கையின் இரண்டாம் ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு 13.2.2000 அன்று சென்னை திருவல்லிக்கேணி வேமூரு ரங்கநாதசெட்டி ஹாலில் புதுதாயிரத்தில் புதுவிழா என்ற தலைப்பில் நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது. நூற்றுக்கும் அதிகமான குலஸ்வாமிகளும் நமது குல பெண்களும் கலந்து கொண்டார்கள். ஆச்சார்ய ஸ்தோத்ர பாடத்துடன விழா துவங்கியது. நமது பத்திரிக்கையின் ஆசிரியர் ஸ்ரீ. உ.வே. N.S பார்த்தஸாரதி பட்டாச்சார் அனைவரையும் வரவேற்று பேசினார். திருவல்லிகேணி ஸ்ரீ உ.வே. S வெங்கட கிருஷ்ண பட்டாச்சார் பொன்னேரி, ஸ்ரீ உ.வே. S கோபாலகிருஷ்ணபட்டாச்சார், கடுக்கலூர் ஸ்ரீ உ.வே. K.S மணிவண்ண பட்டாச்சார் மற்றும் மருதாடு ஸ்ரீ உ.வே. புலவர் நா. வேங்கடவரதபட்டாச்சார் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். பின்பு தற்கால ஸ்ரீ வைகாநஸ சமூக முன்னேற்றத்திற்கு பெரிதும் துணைபுரிபவர்கள் ஆணகளா? பெண்களா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்றத்திற்கு ஸ்ரீ. உ.வே. S ராகுவீரபட்டாச்சார் ஸ்வாமி மதுராந்தகம், நடுவராக இருந்தார். ஆண்களே? என்ற அணியில அரக்கோணம் பிருஹஸ்பதி ஸ்ரீ. உ.வே. A.T திருவேங்கட பட்டாச்சார், திருவான்மியூர் ஸ்ரீ. உ.வே. S ஸ்ரீனிவாச பட்டாச்சார், திருவல்லிக்கேணி ஸ்ரீ உ.வே. N.R வாசுதேவ பட்டாசசார் ஆகியோர் கலந்து கொண்டு வாதாடினார்கள். பெண்களே? என்ற அணியில் சிந்தாதிரிபேட்டை ஸ்ரீமதி. சாந்தா ராமகிருஷ்ணன், திருவான்மியூர் ஸ்ரீமதி கலாஸ்ரீனிவாசன், திருவல்லிக்கேணி. ஸ்ரீமதி. ஜெயஸ்ரீ ஸ்ரீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு வாதாடினார்கள முடிவில தற்கால ஸ்ரீவைகானஸ சமூக முன்னேற்றத்திற்க்கு பெரிதும் துணைபுரிபவர்கள் பெண்களே என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. பின்பு, பட்டிமன்றத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் AKS Trust ன் சார்பில் நினைவுபரிசு வழங்கப்பட்டது. பின்பு, திருமலை S.V.D.S.V சபா சார்பில் இரண்டு மலர்கள் வெளியிடப்பட்டது. ஸ்ரீவைகாநஸ ஞான வேள்வி சிறப்பு மலரை ஸ்ரீவைகாநஸ பகவத் ஸாஸ்த்ர ஸுதா நிதி ப்ருஹஸ்பதி ஸுதர்ஸநம் ஸ்ரீ. உ.வே. S. சந்தானபட்டாச்சார் வெளியிட - திருவல்லிக்கேணி. ஸ்ரீ. உ.வே. S வெங்கடகிருஷ்ண பட்டாச்சார பெற்றுக்கொண்டார். ஸ்ரீவைகாநஸம் (ஐந்தாவது வெளியீடு) மலரை திருவல்லிக்கேணி ஸ்ரீ. உ.வே. N.V கோவிந்தராஜ பட்டாச்சார் வெளியிட மருதாடு புலவர் ஸ்ரீ உ.வே. நா. வேங்கடவரத பட்டாசசார் பெற்றுக கொண்டார். ஸ்ரீவைகானஸ ஞான வேள்வி ஆஹுதிகளை சிறப்பாக நடத்திய உபயதார்ர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். நமது பத்திரிக்கையின் இணையாசிரியர் ஸ்ரீ. உ.வே D மோகன் பட்டாச்சார நன்றிகூற் மங்கள ஸ்லோகத்துடன் விழா இனிதே நிறைவுற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை AKS Trust மற்றும் S.V.D.S.V சபா (திருமலை) வினர் செய்திருந்தனர்.

By. நமது நிருபர்.